Registered No. M. 2330

'SIDDHANTHAM
Vol. 29—No. 4



# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 29 | துன்முகி சித்திரை 1956 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை பக்கம்



பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
10, மான்டித் ரோட், எழும்பூர், சென்னை-8

ஆண்டு சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

# சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை

## சமாஜம் நடத்துகிற சைவத்தேர்வுகளின் பாடத் திட்டம்

### இளஞ்சைவப் புலவர் தேர்வு **1956-1957** ஆண்டுகள்

சைவ இலக்கியம்—(1) ஞானியார் சுவாமிகள் "விநாயகப் பிரபாவம்" பற்றிய விரிவுரை (2) பாம்பன் சுவாமிகள் "பரமசிவனைக் குறித்த வியாசம்" (3) திருக்குறள் முதல் பத்து அதிகாரங்கள் (கடவுள் வாழ்த்து முதல்) பரிமேலழகர் உரையுடன் (4) அகத்தியர் தேவாரத் திரட்டு முதல் பத்துப் பதிகங்கள் (கயப்பாக்கம் சதாசிவ செட்டியாருரையுடன்).

சைவ சாத்திரம்—(5) திருவருட் பயன் - திரு. சிவபாத சுந்தரம் உரையுடன் (யாழ்ப்பாணப் பதிப்பு) (6) சிவஞான சித்தியார் முதல் சூத்திரம் சிவாக்ர யோகிகள் உரையுடன்- இவற்றுள் 1, 2, 6, நமது சமாஜத்திலும், 3 பல புத்தக வியாபார நிலையங்களிலும், 4 தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்திலும், 5 யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை "இந்து சாதனம்" காரியாலயத்திலும் கிடைக்கும்.

### சைவப் புலவர் தேர்வு **1956-1957** ஆண்டுகள்

சைவ இலக்கியம்—(1) தேவாரம் முதல் திருமுறை உரையுடன் (தருமபுர ஆதீன வெளியீடு) (2) பெரியபுராணம் முழுமையும் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் உட்பட (சமாஜ வெளியீடு) (3) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார் எழுதியது) (4) பாம்பன் சுவாமிகள் உரை நடை நூல்களில் சுமார் 200 பக்கங்கள் (விவரம் சமாஜக் காரியதரிசியிடம் அறிக).

சைவ சாத்திரம்—(5) சிவஞானபோதச் சிற்றுரை (சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருவள்ளுவரகம்- ப. இராமநாத பிள்ளை விளக்கவுரை) முழுமையும் (6) சிவ ஞான பாடியம் முதல் இரண்டு சூத்திரங்கள் முழுமையும் (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு). தேர்வு 1956, 1957ஆ அக்டோபர்மீ மூன்றும் ஞாயிற்றுக்கிழமையன்று இந்தியாவிலும் இலங்கையிலும் வசதியுள்ள இடங்களில் நடைபெறும். மற்ற விவரங்கட்கும், அச்சிட்ட விண்ணப்பத்தாள்கட்கும் சமாஜக் காரியதரிசிக்கு எழுதுக.

Regd. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வானியையுள் நாடு

| மலர் 29 | துன்முகி சித்திரை 1956 ஏப்ரல் | இதழ் 4 |
| --- | --- | --- |

## அன்பும் அறிவும்

ஆசிரியர்

அன்பும் அறிவும் மனிதனுக்கு உள்ள இரண்டு சிறந்த பண்புகள். இவை இரண்டையும் வெவ்வேருகப் பிரித்து ஆராய முயலும் அறிவு. ஆனால் இவை இரண்டையும் சேர்த்து ஒன்ருக்க முயலும் அன்பு. மனிதன் அறிவைப் போற்றிப் பிரிவினை ஏற்பான். இறைநிலையோ இரண்டையும் இணைத்து ஒன்ருக்க முயலும். இது உலக, தெய்வ இயல்களுக்கு உள்ள வேற்றுமையே. ஒன்று அறிவியல் அல்லது விஞ்ஞான முறை, மற்றது அன்பு இயல் அல்லது சமய நிலை.

இந்த இரண்டு நிலைகளையும் விளக்கவேண்டி நமது ஆன்ருேர்கள் ஒரு சரிதை கூறுவார்கள். ஒருகால் அறிவையே போற்றிவந்த ஒரு அறிஞன் இறைவனை அறிவு மயமாக அறிந்து அவனையே போற்றினன். அருகில் இருந்த இறைவியைப் போற்றவில்லை. ஏனெனில் அது அன்பு மயம். இதனை அறிந்த இறைவி, இறைவனேடு இரண்டறக் கலந்து நிற்க அனுமதி கேட்டாள். இறைவனும் அதற்கு இசைந்து தன் இடப்பகுதியை இறைவிக்குத் தந்தான். அப்போது அம்மையப்பர் உருவம் தோன்றிற்று. ஆனல் அந்த அறிஞனுக்கு இது பிடிக்கவில்லை. மீண்டும் பிடிவாதமாக அறிவையே போற்ற வேண்டி, ஈருருவங்களுக்கும் இடையே வண்டு உருவம் எடுத்துத் துளைத்துச் சென்ருனம். இதுதான் விஞ்ஞானிகளின் பிடிவாதத் தன்மை என்பர். இறைவனுடைய

அம்மையப்ப உருவம், இவ்விரண்டு பண்புகளும் தனித்தனி இயங்கினல் பயனில்லை என்பதாம். இவ்விரண்டு பண்புகளும் இணைந்து விளங்கினல், விஞ்ஞானமும் சமயமும் ஒன்றுபட்டு இயங்குவது ஆகும். இதனை விளக்குவதே அம்மையப்பர் திருவுருவம்.

ஒருநாள் மேல்நாட்டு அறிஞர் ஒருவர் சோழ நாட்டிலுள்ள ஒரு சிவாலயத்திற்குச் சென்றார். அங்கே பல திருவுருவங்களைப் பார்த்துவிட்டு மாதொருபாகன் உருவத்தைப் பார்த்து வியந்து நின்றார். இது என்ன உருவம் என்று அருகில் இருந்த திரு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களைக் கேட்டார். அவர் இது மாதொருபாகனர் அல்லது அம்மையப்பர் திருவுருவம் என்று கூறி, அதனுடைய தத்துவத்தை விளக்கினர். ஆனல் அந்த அறிஞர் தமது இலக்கிய அறிவை அதில் நுழைத்து, யவன சரிதத்தை எடுத்துக் கூறி இது ஆமஜான் (Amazon) போல் இருக்கிறது என்று கூறினராம். யவனர் வரலாற்றின்படி ஆமஜான் என்ற ஒரு நாடு, வீரப் பெண் மணிகளையே கொண்ட ஒரு நாடு என்றும், அவர்கள் போர் புரிவதில் தடை இல்லாமல் இருக்கும் பொருட்டு வில்லை எய்தபோது வலது கையில் தடையாக இருக்க ஒண்ணு மல் போக அதனை இல்லாமல் செய்து கொள்வர் என்றும், ஆகவே அவ்வுருவம் அம்மையப்பர் உருவம் போன்றதென் றும் கூறினராம்.

இதனைக் கேட்டதும், இந்த உருவத்தினுடைய தத்துவத் தில் வரலாற்று அறிவையே முன்னிலைப்படுத்தி விளக்கு வதே, அந்த வெள்ளைக்கார அறிஞருக்குத் தோன்றிய பண் பாடு ஆகும். இந்தச் செய்தியைக் கலை அன்பர் தொண்டை மானர் ஒரு சொற்பொழிவில் விளக்கினர்.

இதிலேயும் அறிவுக்கும் அன்புக்கும் உள்ள வேறு பாடு தெரிகிறதல்லவா? சைவத்தில் இரு பண்புகளும் ஒன்றி யிருத்தலே சால்புடைத்து என்பர். இதனையே விளக்கும் செய்யுள்,

> "அருளால் எதையும் பார்என்றான், அதனை
> அறியாதேஎன் அறிவாலே பார்த்தேன்!
> இருளான பொருள் கண்ட தல்லால்,
> என்னையும் கண்டிலன்! என்னடி தோழி ?"

## அறிஞர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை மறைவு

திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் மறைவு எதிர்பாராத வகையில் சென்னையில் காந்தி நகரில் அவரது 68-ம் வயதில் ஏற்பட்டது. அவர் சிறந்த தமிழ் அன்பர், ஆராய்ச்சியாளர், சைவ அன்பர், சைவ நூல்களைக் கற்று அறிந்தவர். 1888 அக்டோபர் 13-ல் பிறந்து, நெல்லை இந்துக் கல்லூரியிலும் சென்னை கிறித்தவர் கல்லூரியிலும் படித்துச் சட்ட பட்டதாரியானர். தமிழில் முதன்மையில் தேறிச் சேதுபதி பொன் பதக்கம் பெற்று விளங்கியவர். முதலில் திருவனந்தபுரத்தில் வழக்கறிஞராக இருக்கையில், கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை, இசை அறிஞர் இலக்ஷ்மணப் பிள்ளை ஆகியோர்களிடம் நெருங்கிப் பழகியவர். திரு. சுந்தரம் பிள்ளை அவர்களின் மனோன்மணியத்தைப் பதிப்பித்தவர். பிறகு நெல்லையில் குடியேறி வழக்கறிஞராகத் தொழில் பார்த்தார்; பல மாசிகைகளுக்குச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேரகராதிக்கு ஆசிரியராக இருந்து அதனைப் பதிப்பித்தார். அதற்காக அவருக்கு இராவ்சாகிப் பட்டமும் வழங்கப்பட்டது. பிறகு சென்னையிலும் திருவனந்தபுரத்திலும் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினர். பல கலை ஆராய்ச்சி நூல்களைப் புதுமுறையில் எழுதி யிருக்கின்ருர். சொல் ஆராய்ச்சியில் மிக வல்லவர். திருச்செங்கோட்டில் நடந்த சைவ சித்தாந்த மாநாட்டிலும் சைவமர்நாட்டிலும் தலைமை வகித்துச் சிறந்த பேருரை நிகழ்த்தி யிருக்கின்ருர். பல சிறு அகராதி நூல்களையும் நிகண்டுகளையும் வெளியிட்டிருக்கின்ருர். ஏட்டுப் பிரதிகளை நன்கு படித்து ஆராய்ச்சி செய்வதில் வல்லவர். நமது சமாசத்திற்குப் பதிப்பு ஆசிரியர் வேலையை வெகு திறமையோடு செய்திருக்கிருர். அவரது மறைவால் தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அன்னர் ஆன்மா அமைதி பெறுவதாகுக.—ப-ர்.

# " அழுந்திய மாணிக்கம் "

டாக்டர். பு. வே. தேவராஜு முதலியார் அவர்கள்,
திருப்பாதிரிப்புலியூர்

வேலை சூழ்ந்து விரிந்து பரந்துள்ள நிலவுலகத்தில் நாம் யாவரும் வாழ்கின்றோம். இயற்கை அன்னை நமக்கு வேண்டும் பொருள் அனைத்தும் தன்னகத்தும் புறத்தும் வளர்த்து வைத்திருக்கின்றாள். எதையும் கண் கொண்டு பார்த்தால் காணலாம். காது கொண்டு கேட்டால் அறியலாம். காணப்படாதன, அறியப்படாதன உலகில் ஒன்றும் இல்லை. காணும் கண்ணும், கேட்கும் செவியும் அறிவோடு தொடர்புற்று, முன்னோர் மொழிந்த இடம், பொருள், ஏவல் களைக்கொண்டு ஆராய்ந்து அறிந்துகொள்ளல் வேண்டும்.

விலையுயர்ந்த பொருளாகிய ஒன்பது மணிகளில், செந்நிறம் வாய்ந்தது மாணிக்கம் என்பதாகும். மாதுளம் பழத்தைப் போலவும், புருவின் இரத்தம் போலவும், முயலின் குருதி போலவும், உடல்நலம் நிறைந்த மக்களின் கொழுங் கடைக்கண் போலவும், செவ்விய இதழைப் போலவும், இந்திர கோபம் போலவும், நிறத்தைப் பெற்றுள்ள இந்த மாணிக்கங்கள் பூமியில் ஆழ்ந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட சுரங்கங்களில் கிடைப்பனவாகும். உலகின் சிற்சில பகுதிகளில் மட்டும் மாணிக்கங்கள் சுரங்கங்களினின்றும், பெருவாரியாகக் கிடைக்கின்றது. அவற்றை மக்கள் அங்கிருந்து வெட்டி யெடுத்துச் சாணைக்கல்லில் தீட்டி உயர்ந்த மாணிக்கங்களாக மதிப்பிடும்படி செய்து விலைபெறுகின்றனர்.

" அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு " என்னும் பெரியோர் பொருள் மொழியின்படி, புறம்பேயுள்ள பல உலோகங்களும், கடலும், மணியும், முத்தும், பிறவும் இப்பிண்டமாகிய உடலிலேயும் உண்டு. இவ்வுண்மையை உள்நாட்டத்தினால் அறியவேண்டும். " முகத்தில் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள்! அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம் " என்று திருமூலரும், " ஒன்றி இருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை " என்று திருநாவுக்கரசரும் அறிவுறுத்திக் கூறியுள்ளமை காணலாம். இக்கருத்தினையே,

"என்னைநான் கண்டபடி இப்புவியில் எல்லோரும்
தன்னையே காணத் தகும்காணும் !—சொன்னேன்
ஒளிநாட்ட மோடுமனம் உள்நாட்டம் பெற்று
வெளிநாட்டம் ஆகா விடின்"

எனச் சொரூபசாரம் என்னும் நூலும் கூறித் தெளிவிக்கும். இவ்வாற்றால் வீணான வெளிநாட்டத்தைவிட்டு உள் நாட்டம் (Introspection) பெறுவார்க்கு, ஒளிநாட்டம் (clairvoyance) உண்டாகும் என்பது புலனாகின்றது.

நமது உடல் வியக்கத் தக்கதொரு சிறந்த இயந்திரம் போன்றது. இதனுள் இயங்கும் இனைத்தெனலாகாப் பேராற்றல் அளவிடற்கரியது. இதனை நெறியறிந்து முறையே இயக்கவல்லார் சிவயோகிகளேயாவர். ஆதலினால் இவ்வுடலினை "மாயா இயந்திர தனு" என்றார் மெய்கண்டுணர்ந்த மெய்கண்ட தேவரும். இக்கருத்தையே,

"காயக் குழப்பனைக் காயநன் நாடனைக்
காயத்தின் உள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத் துளேஎன்றும் தேடித் திரிபவர்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே"

என்பார் நம் திருமூலர்.

இந்தக் காய நன்னாட்டிலேதான் அழுந்திக் கிடக்கும் மாணிக்கத்தை அகழ்ந்து எடுக்கவேண்டும். அந்த மாணிக்கம் என்பது சிவ பரம்பொருளே யாகும். "மாணிக்கமே சுடர் வண்ணக் கொழுந்தே" எனச் சிவபெருமானைச் சான்றோர்கள் போற்றிப் புகழ்வர். இச்செம்மணியாய சிவமெனும் செம்பொருள் காண்பதே அறிவு. ஞானாசிரியன் நமக்கு நம் மனத்தினைக் கண்ணாடிபோல் தூய்மை செய்து இச் செம்பொருள் மாணிக்கத்தினைப் பதியவைக்க வேண்டும். இதனையே "பளிங்கனைய சித்து நீ, உன் பக்குவம் கண்டு அறிவிக்கும் பான்மையேம் யாம்" எனத் தாயுமானவரும்,

"சிந்தைதனில் அருச்சிக்கச், சிவஞா னத்தாற்
சிந்திக்கச் சிந்திக்கத், தர்ப்பணத்தை விளக்க
வந்திடுமவ் வொளிபோல மருவி, அரன் உளத்தே
வரவர வந்திடுவன்,பின் மலமான தறுமே !"

என அருள் நந்தி சிவமும், "பளிங்கில் பவளம் பதித்தான் பதியே" எனத் திருமூலரும் கூறியருளியுள்ளனர்.

சிவ பரம்பொருளை மாணிக்கம் என்று சான்றோர் பலரும் தம் பாடல்களில் குறிப்பிட்டுப் போற்றி யுள்ளனர்.

"ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம்"

"மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடும் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே!"

"மாணிக்கம் ஒத்து மரகதம் போன்று வயிரம்மன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும் ஐயாறன் அடித்தலமே"

"முத்து, மர்மணி, மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி!
அத்தன் ஆண்டு தன்னடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே!"

எனப் பலவாறு, நம் சிவநெறிப் பெருமக்கள் பலரும் இந்தச் சிவ மாணிக்கத்தைப் புகழ்ந்து பரவுகின்றனர். "மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே! அன்னே உன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே?" என நம்பி யாரூரர் நயந்துருகுகின்றார்.

இந்தச் சிவமெனும் மாணிக்கம் நம்முள்ளே அழுந்திக் கிடக்கின்றது. சிவமாணிக்கத்தினைச் சுரங்கங்களிற் சென்று குடைந்து நாம் வருந்தித் தேடிக் கண்டெடுக்க வேண்டுவ தில்லை.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

எனத் திருமூலர் விளக்கியதுபோல, நமது மனிதவுடம்பு ஒரு பெருங் கோயிலாக விளங்குகின்றது. அக்கோயிலின் கோபுர வாயிற்படிபோல, நமது வாய் காணப்படுகின்றது. அக்கோயிற்கண் உள்ள கருவறையாக நம் உள்ளம் திகழ் கின்றது. அக்கருவறையில் திகழும் சிவலிங்கமாக, நம்ம

ஞரின் சீவன் இலங்குகின்றது. சிவலிங்கத்திற் பதிந்து ஒளிவிடும் மாணிக்கம்போல, சீவனுக்குள் சிவம் பதிந்து தன் அருட்கதிரொளியைப் பரப்பி நிற்கின்றது. சீவனுக்குள் சிவம் பதிந்து சுடர்ந்து நிகழ்வதனைப் "பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல், சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" எனத் திருமூலர் வேறோர் உவமை கொண்டும் விளக்குவர். இங்ஙனம் உடலுக்குள் உறையும் உயிரின்கண் அழுந்திப் பதிந்து விளங்கும் மாணிக்கம்போலும் சிவமெனும் பேரொளிப் பிழம்பினைக் கண்டறிய முயல்வதே நம்மனோர் கடமையாகும். அச்சிவ மாணிக்கத்தைப் பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைந்து, உருக்கமுடன் வழிபட்டுத் தேட முயன்றால், அது தானே வெளிப்பட்டுச் சுடர்விட்டு நம்மனோர்க்கு நலம் பலவும் செய்தருளும்!

"சாண்ஆகத் துள்ளே அழுந்திய மாணிக்கம்
காணும் அளவும் கருத்தறிவார் இல்லை
பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே"

---

# பராவுசிவர்

சித்தாந்த ரத்நாகரம்,
முதுபெரும்புலவர் - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
தலைவர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

'பராவுசிவர்' என்னும் ஒரு தொடர் சைவ சித்தாந்த சாத்திரம் பயில்வார் அறியத்தக்க சிறப்புடையது. அதன் முதற் சொல்லின் நிலையை முதலில் அறிதல் வேண்டும். விரவுதல்—விராவுதல், அரவுதல்—அராவுதல், பரவுதல்—பராவுதல் என்பவற்றின் ஒற்றுமையை உணர்வார்க்கு அச்சொல்லின் நிலைமை தெளிவுறும்.

"பரவுவார் இமையோர்கள்! பாடுவன நால்வேதம்!
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள் ஒருபாகம்!
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள்! மேல்மேல்உன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ? அரியானே!"

என்னும் திருவாசகத்துள் அம்மூன்று சொற்களின் அடியும் உள்ளன. இரண்டன் அடியாகத் தோன்றிய பலர்பாற் படர்க்கை வினைப்பெயர் 'பரவுவார்' 'விரவுவார்' என்பன ஆகும்.

பரவுதல் பலவற்றிற்கும் உண்டு. நிலப்பரப்பு, நீர்ப் பரப்பு, தீப்பரப்பு, காற்றுப் பரப்பு, விண்பரப்பு, உள்ளப் பரப்பு, உணர்வின் பரப்பு எல்லாம் பரவுதலின்றி இல்லை. ஒலிப்பரப்புக்கும், ஒலியுடன் பொருள் கூடிய உரைப் பரப் புக்கும், பரவுதல் உரியதாம். ஆதலின், பரவுதல் வாழ்த்துக் கும் உரித்து என்க.

'பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவுவனே'

'பாவுவார் அவர்பாடுசென்று அணேகிலேன்
பல்மலர்பறித்து எத்தேன்'

'கட்டில் ஏற்றிக் கைதொழுஉப் பரவி'

என்பவற்ருல், வாழ்த்தற் பொருளில் அச்சொல் ஆளப்படு தலை அறியலாம்.

"பாபரக்க வேண்டாம்! பலகாலும் சொன்னேன்!
வரவரக்கண் டாராய் மனமே!—ஒருவருக்கும்
தீங்கு நினையாதே! செய்ந்நன்றி குன்ருதே!
எங்கி இளையா திரு!"

என்னும் தருமைக் குருஞானசம்பந்தர் அருளிய திருப் பாடலில், உள்ளப் பரப்பும் உணர்வின் பரப்பும் குறித்த முதற்ருெடரைக் காண்க. பரவுதல், பராவுதல் ஆகிய தன் வினைக்கும் பரப்புதல் என்னும் பிறவினைக்கும் ஏற்பப் பொருள் கொள்ளல் வேண்டும். சொல்லும் பொருளும் பரவுதலில் கருத்திற்குத் தக்கவாறு விளக்கம் வேண்டி யிருக்கின்றது. வாழ்த்தல் (துதித்தல்) என்னும் பொருள் தருங்கால், சொற்பரவுதலும் உலாவுதல் (சஞ்சரித்தல்) என் னும் பொருள் தருங்கால், பொருட்பரவுதலும் ஆகும்.

சொல்லுணர்ச்சி இன்றிப் பொருளுணர்ச்சி அமை யாது. அதனல் இதுவரையில், சொல்லாராய்ச்சியிற் சிறிது நிகழ்த்தலாயிற்று. இனிப் பொருளாராய்ச்சியிற் புகலாம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளிய திருநெறிய தமிழுள் (சமாசப் பதிப்பு 3519, 3, 67, 6.)

"நிராமய பராபர புராதன பராவுசிவர் ஆகஅருள்என்று
இராவும் எதிர்ஆயது பாரினை புராணன் அமராதிபதியாம்
அராமிசை யிராதெழில் தராய்அர பராயண வராகவுருவா
தராயனை விராய்எரி பராய்மிகு தாய்மொழி விராயபதியே"

என்னும் வழியெதுகைத் திருப்பாடலில், 'பராவுசிவர்' என்னுந் தொடர் வந்துளது. அது 'பராவுசிவராக' என்று பிரிவின்றி நிற்றல் பற்றி, 'எவரும் துதிக்கின்ற சிவனே விரும்பத்தக்கவனே' எனப் பொருள் எழுதப்பட்டிருப்பதும் காணலாம். பராவு+சிவ+ராக எனப் பிரித்துக் கொண்ட பொருளே அது. சைவ மரபு தெரிந்து எழுதப் பட்ட பொருள் அன்று அது. அம்மரபினைத் தெரிந்துகொள்ளல் இங்கு மிக்க பயனுகும். இதில், 'அமர் ஆதிபதி' எனக் கொண்டு, வாழ்கின்ற முதலூர் எனப் பொருளுரைத்தல் வேண்டும்.

"சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள், உலகில்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள், இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுஎன்? இம்மையிலே உயிரின்
பற்றுஅறுத்துப், பாத்தைஅடை 'பராவுசிவர்' அன்றே?
ஆக்கும்முடி கவிழ்த்து அரசாண்டு, அவர்கள் அரிவையரோடு
அனுபவித்துஅங்கு இருந்திடினும்,அகப்பற்று அற்றுஇருப்பர்!
நோக்கிஇது புரியாதோர், புறப்பற்று அற்றாலும்
நுழைவர் பிறப்பினின், வினைகள் நுங்கிடாவே!"

என்னும் சிவஞான சித்தியாரில் (287), 'பராவுசிவர்' என்னுந் தொடர் அமைந்துள்ளதையும், அதன் பொருளையும், பண்டிருந்த சைவ மரபுடன் உணர்ந்த ஆசிரியர் அத்தொடரைப் பொருத்தமான இடத்தில் வைத்து விளக்கியிருப்பதையும், 'பராவுசிவர்' ஆவார் இன்னர் என்பதையும், அவர் இயல்பையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

"பசுகரணம் சிவகரணம் ஆகத் துன்னிய சாக்கிரத்தின் நின்றுகொண்டுதானே கரணம் கடந்த அதீதத்தைப் புரிந்தார், கருவிகளின் நீங்கி நிட்டை மேவினரோடு ஒப்பச் சிறந்தாரே ஆவர். அவ்வுண்மை அறிந்தார் உண்டு உடுத்துப் பூசி முடித்துச் செய்யும் தொழிலொப்புமையே பற்றி அவரை உலகத்தாரோடு வைத்து எண்ணற்க."

"பராவுதல் - சஞ்சரித்தல்" என்பது மாதவச் சிவ ஞான யோகிகள் உரை. இவற்றால், 'பராவுசிவர்' என்பது வினைத்தொகை நிலைத்தொடராய்ச், 'சஞ்சாரஞ் செய்யும் சிவனர்' என்னும் பொருள் பயத்தல் விளங்கிற்று. அத்தகை யோர் சகலாவத்தையின் சாக்கிரத்தே, சுத்தாவத்தையின் அதீதத்தைச் செய்திருப்பவர்கள், எல்லாப் பற்றும் விட்டகன்றவர்கள், தவச்செல்வர்கள். அவர்களது ஒப்புயர்வில்லாத பாக்கியம் சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத பெருமையுடையது. இப் பிறவியிலேயே உயிர்ப்பற்று ஒழிந்து, சிவத்தை அடைந்து சிவமானவர்கள். அடையப் பெற்ற சிவம் எங்கும் நிறைந்தது; சஞ்சாரம் இல்லாதது. அடைந்தவர்கள் ஆகிய சிவர் எல்லாரும், தம் தம் உடம்புள் விளங்கி, அவ்வுடம்புள்ள வரையில் உலகில் சஞ்சாரம் புரிபவர்கள். அதனால், பரமசிவத்தைப் 'பரம்' என்றும், அச் சிவத்தை அடைந்து சஞ்சார சிவர்களாய் விளங்கும் சீவன் முத்தர்களை, 'பரத்தை அடை பராவுசிவர்' என்றும் வேறுபாடு விளங்க உணர்த்தி அருளினர் ஆசிரியர் அருணந்தி தேவ நாயனர். சிவன் ஒருமை. சிவர் பன்மை. நடமாடும் சிவமாயிருப்பவர் பலர் ஆதலின், 'சிவர்' எனலானர்.

சமாசப் பதிப்பாகிய சிவப்பிரகாசச் சிந்தனையுரை (பக்கம் 860) முடிவில், ஐவகை முத்தியை விளக்கும் இடத்தில், 'சீவன் முத்தியாவது பரமே பார்த்திருந்து சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் பராவுசிவர் ஆதல்" என்றெழுதப்பட்டிருத்தலை இங்கு நோக்குதல் வேண்டும். இவர்க்கு இடமான உடம்பே கோயில். இவரே சிவர். இவர் உடம்பு கோயில் என்றதால், அதில் சிவம் இருத்தல் வேண்டும். உயிர் சிவமாகாமல் இருப்பின், அவ்வுயிர் இருக்கும் உடம்பு கோயில் ஆதல் எவ்வாறு கூடும்? இச்சிவன் முத்தனு (நடமாடும் சிவனு)க்கு இடமான உடம்பையே "நடமாடக் கோயில்" என்று கொண்டு முன்னோர் வழிபட்டனர். திருமூலர் எங்கு எவரை எத்தலைப்பில் 'நடமாடக் கோயில்' என்றருளினர்? இவ்வாராய்ச்சி அத் திருமந்திரத்தை நோக்கி முடிவுறத் தக்கது. அஃது அரியதும் அன்று. அதனைப் பின்னர் வரும் கட்டுரையால் அறியலாம்.

'பராவுசிவர்', நடமாடுஞ் சிவர், சஞ்சார சிவர் எல்லாம் சீவன் முத்தர்களையே குறிப்பன.. அத்தகைய முத்தர்களை

இப்பொழுதும் அதற்குரிய நோக்கம் உடையோர் காண்டல் எளிது. அந்நோக்கம் இல்லார்க்கு, அச்சீவன் முத்தர் தோன்றுவது அரிது. இக்காலச் சீவன் முத்தர் பொருட்டே இஃது எழுந்தது.

---

## மாமாங்கம்

சித்தாந்தப் பிரசங்காமிர்தம் - பூ. சமரபுரி முதலியார், தாம்பரம்.

ஏவியிடர்க் கடலிடைப்பட்டு இளைக்கின் றேனை,
இப்பிறவி அறுத்தேற வாங்கி ஆங்கே
கூவிஅமர் உலகனைத்தும் உருவிப் போகக்
குறியில்அறு குணத்தாண்டு கொண்டார் போலும் !
1தாவிமுதல் 2காவிரிநல் 3யமுனை 4கங்கை
5சரசுவதி 6பொற்றாமரை 7புட்கரணி தெண்ணீர்க்
8கோவியொடு 9குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

இத் திருத்தாண்டகத்தில் ஒன்பது நதிகள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவை : (1) தாவி (2) காவிரி (3) யமுனை (4) கங்கை (5) சரசுவதி (6) பொற்றாமரை (7) புட்கரணி (8) கோவி (9) குமரி.

இவற்றுள்,

1. தாவி என்பது கோதாவிரியாகும். கோதாவிரி கோதாவி என வழங்கப் பெறும். ["கோதாவி முதல் தீர்த்தம் (ஆவினது) கோட்டினுநிச் சராசரமுங் கூடி நிற்கும்" என்னும் சிவதருமோத்தரம் - கோபுரவியல் - 123-ம் செய்யுளில் காண்க.] கோதாவி என்பது தலைக்குறையாய்த் தாவி என வந்தது.

6. பொற்றாமரை—இது சரயு நதியைக் குறிக்கும் பொற்றாமரை என்பது குளத்தைக் குறிக்க, அது குளம் என்னும் பொருளையுடைய சரசு என்னும் சொல்லைக் குறித்து, அது சகர யகரப் போலியாய்ச் சாயு நதியைக் குறித்தது.

7. புட்கரணி—புஷ்கரணி - இது பயோஷ்ணி என்னும் நதியைக் குறித்தது. (புஷ்கரணி—புஷ் - புண்ணியத்தை,

கரணி - செய்வது. அது ஞானத்தை உடையது. பயோஷ்ணி —பய - புண்ணியம், உஷ்ணம் - ஞானம்; இருபெயர்ப் பொருள் விகுதி. ஆகவே பயோஷ்ணி என்பது புண்ணியத்தைக் கொடுக்கும் ஞானத்தையுடையது. இது புஷ்கரணி என்பதன் பரியாயம்.)

8. கோவி - இது நறுமதை (கோவி—கோ - நன்மை, மேன்மை; வி - மிக்குடையது. நறுமதை—நறு - நன்மை, மதா - மிக்குடையது).

இவ்வொன்பது நதிகள்தாம், மாமாங்கத்தன்று மாமாங்கக் குளத்தில் வந்து மூழ்கித், தங்கள் பாவத்தைக் கழுவிக் கொள்கின்றன.

மேற்குறித்த திருத்தாண்டகம் " திருக்குடத்தைக் கீழ்க் கோட்டம்" என்னும் தலத்தைக் குறித்துப் பாடப்பெற்றது. இது நாகேஸ்வர சுவாமி கோவில் என வழங்கும். இதன் அருகாமையில் உள்ளது மகாமகத் தீர்த்தம்.

மாமாங்கம் என்பது கும்பகோணத்தில், பன்னிரண்டாண்டுக்கு ஒருவிசை அக்கினி மூலையில் உள்ள மாமாங்கக் குளத்தில், ஞானக்கினி தேவனால் நீர்மயமாக உண்டாக்கப் பெறும் ஒரு நீர்ப்பெருக்கு. கும்பகோணம் இவ்வுலகத்தில் ஞானக்கினிக்கு நிலைத்த வாசஸ்தானம்.

இம் மண்ணுலகத்தில் வாழும் மக்கள் தாம் செய்த பாவங்களைக் கழுவக் கங்கை முதலிய நதிகளுக்கு அப்போதைக்கப்போது சென்று மூழ்கி, அவற்றில் கழுவிவிட்ட பாவங்களை அந்நதிகள் பொறுக்கலாற்றாது, இறைவனை வேண்ட, அப்பெருமான் இந்த மாமகத் தீர்த்தத்தில் கழுவிக் கொள்ளும்படி அருள் செய்தார். அப்போதே ஞானக்கினி தேவனுக்கும், இந்தக் குளத்தில் எக்காலமும் இருந்து மக்களுடைய பாவங்களை எரிக்கும்படி கட்டளையிட்டருளினர். ஆகையால் ஞானக்கினி தேவன் அங்கிருந்துகொண்டு நதிகள் கழுவிவிட்ட பாவங்களையும் மக்களுடைய பாவங்களையும் எரிக்கிறான்.

இந்த ஞானக்கினி தீர்த்தம் குடந்தையில் எழுந்தருளியிருக்கின்ற மகாமக மூர்த்திக்கு ஞான தீர்த்தமாகும். அவர் நாள்தோறும் காலையில் இதில் மூழ்குகிறாராம். இது நாகாபரணர் கூறியுள்ள ஆகமத்தில் உள்ளது.

இதையறிந்து ஞானிகள் பலர் வந்து இதில் மூழ்குவார்கள்.

நிலைத்த ஞானக்கினியைப் பெற மக்கள் விரும்பினால்—கீழ்மக்களானாலும் மேன்மக்களானாலும்—இதில் மூழ்குவாரானால், தங்கள் தீமை நீங்கி மேன்மை அடைந்து ஞானக்கினியை மிக்க இலேசாகப் பெறலாம். மிக்க இலேசாக என்றதனால், மிக்க ஞானக்கினியைப் பெற்றுக்கொள்ளுதற்குரிய ஞான இச்சை உடையவர்களாய் இருத்தல் வேண்டும். இல்லையேல், இம்மையினும் நன்மை இழந்து துன்பத்திற்காளாகி, மேல்பிறப்புக்களில் மிடியால் வருந்துவர்.

ஞானக்கினி எல்லோர்க்கும் கிடைப்பதன்று. ஞானம் பெறுதற்கு நிலைத்த தவம் வேண்டுமன்றோ? அதுபோலவே இதில் மூழ்குதற்கும் நிலைத்த ஞான இச்சை வேண்டும்.

ஞானம் பெற விரும்புவார் எவ்வாறு "வாழ்வெனும் மையல் விட்டு, வறுமையாம் சிறுமை தப்பித், தாழ்வெனும் தன்மையோடு", "அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுத்தவர்"களாக இருக்கவேண்டுமோ, அதுபோல, இதில் மூழ்கி உண்மைப் பயனைப்பெற விரும்புவோர்களும் அத்தன்மையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறன்றி, மாறுபட்ட எண்ணம் உடையவர்களாய்—"மனம் வேறு, சொல் வேறு, மன்னு தொழில் வேறு" என்பதற்கு இலக்கியமானவர்களாய் மூழ்குதலில் பயனில்லை. உள்ள நலன்களையும் இழப்பர்.

இதை அறிந்து மக்கள் இத்தீர்த்தத்தில் மூழ்கி நலமடைய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக.

ஆழ்க தீய தெல்லாம்—வையகமுந் துயர் தீர்க!

---

# திருநாவுக்கரசரும் திருப்பூந்துருத்தியும்

ச. கா. சீரங்கம், கோவை

"பொருட் சமய முதற் சைவ நெறிதான் பெற்ற புண்ணியக் கண்ணிரண்டெனவும் புவனமுய்ய" என்று சேக்கிழாரால் புகழப் பெற்ற இரண்டு கண்கள் உண்டு

சைவத்திற்கு. அவர்கள், ஞான சம்பந்தரும், நாவுக்கரசும் ஆவார்கள். நாவுக்கரசர் தாம் பல புற சமயங்களைச் சார்ந்து இருந்தாரேனும் தம் தமக்கையின் சொல்வலியால் அவைகளை யெல்லாம் சாடி, சைவம் ஒன்றே தலையாய சமயமென உணர்ந்து சைவநெறி கடைப்பிடித்து ஒழுகிய பெரியாராவார். அவர் பாடியுள்ள பதிகங்கள் யாவும் ஒப்புயர்வற்று மிளிர்கின்றன. சொல்லும், பொருளும், ஒன்றையொன்று மிஞ்சி நிற்கும். பொருள் செறிந்த பாக்களை அள்ளி அள்ளித் தெள்ளத் தெளிய வைக்கும் திறமையாளர். "சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை" என்ற அடிகளை நோக்கும் போது எத்தகைய பொருளுணர்வை நமக்கு உணர்த்துகிறார் என்று விளங்கும். அத்தகைய பெரியார், நமக்குத் தேடிவைத்த செல்வங்கள் கணக்கிலடங்கா. ஒவ்வொரு பாட்டையும் படிக்கும் போதும் உணர்வை இழுக்கச் செய்து, மாற்றானையும் மனந்திருத்தி, சிவநெறி ஒழுகச் செய்யும் திறம் வாய்ந்தது. தமிழ்நாட்டின்கண் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பல்லவர்கள், காலத்தில் சுவாமிகள் வாழ்ந்ததாக வரலாறு ஒருவாறு உணர்த்துகிறது. அன்று பாடிய பாக்கள் இன்றும் காலத்திற்குகந்தவாறே காட்சியளிப்பது, கருத்துக் கிசைந்த இனிய விருந்தாகும். அவரால் பாடப் பெற்ற பாக்கள் முழுதும் நமக்குக் கிடைக்கவில்லை. எத்தனையோ பாக்கள் மறைந்து விட்டன. ஏடுகளை யெல்லாம் மண் தின்று விட்டது என்று எண்ணும்போது உள்ளமே பகீரென்கிறது. இருப்பினும் இறைவன் அருளால் நமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளவை 3066பாக்களாகும். அவைகள் தலமுறைகளாகச் சிவத்தலங்கள் 125ம், பதிகங்களாக 275ம், பொதுப் பதிகங்களாக 37-ம், ஆகத்திருப்பதிகங்கள் 312மாக நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இனியேனும் இதன் ஒளியும், ஒலியும் இனிதே பரவுவதோடு நில்லாமல், மங்கிப் போகாமல் பார்த்துக் கொள்வதும், ஒவ்வொரு சைவர்களுக்குமுள்ள தலையாய கடமையாகும். இத்தகைய பணிகளிலே தலைசிறந்து நிற்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் சமீபத்திய முயற்சியைப் பத்திரிகையில் கண்டு, எண்ணி, எண்ணி இறுமாந்தேன்.

அதாவது நாவுக்கரசர் திருமடம் அமைத்து வாழ்ந்து வந்தது திருப்பூந்துருத்தியாகும். அங்கு அன்னார் வாழ்ந்த இடம் பழுதுபட்டுக் கிடந்தது. அதை மீண்டும் செப்பனிட்டு, அங்கு அடியார்களுக்கு அன்னம் அளித்தல் தேவாரம் ஓது தல், பள்ளி கட்டுதல் முதலிய திருப்பணிகளுக்குச் சுவாமி களும், அறநிலையப் பாதுகாப்புத் தலைவருமான திரு. உத்தண்டராமப் பிள்ளை அவர்களும் முன் வந்திருப்பது பெரு மகிழ்ச்சிக்குரிய பணியாகும். இதைக் கண்ணுற்ற வுடனே எழுந்த ஒரு எழுச்சியே இக்கட்டுரை வரைய என்னைத் தூண்டியது. திருப்பூந்துருத்தி காவிரியின் வட கரையிலே உள்ள சிவத்தலமாகும். அங்கு எழுந்தருளியுள்ள வர்: புஷ்பவனநாதர். அம்மை: அழகாலமர்ந்த நாயகி யாகும். பெயர்களைக் காணும்பொழுது தலத்தின் மகிமை தெரியவில்லையா? புஷ்பங்கள் நிறைந்த வனத்திலே குடி கொண்ட நாதன், அழகெல்லாம் ஒன்று சேர்த்துத் திரண்ட நாயகி! இவர்கள் எழுந்திருக்கின்ற இடம் புஷ்பத்தையும், அழகையும் தன்னகத்தே கொண்ட இடமாகும். அங்கு ஓங்கி உயர்ந்த தென்னையும், நீண்டு நிமிர்ந்த கோபுரமும், சுற்றிலுமுள்ள நந்தவனமும் பார்ப்போர் கண்களை மட்டு மல்ல, கருத்தையும் அள்ளும் தன்மையுடையதாகும். அத் தகைய பதியிலே தான் நம் சுவாமிகள் நாவுக்கரசர் திருமடம் கட்டித் திரு நற்பணிகளைச் செய்து, கன்னித் தமிழாம் பொற்புடைய தமிழைத் தலைமேற்கொண்டு, இறை வனுக்கு, சொற்பாவும், பற்பாவும் வாயாரப் பாடி மகிழ்ந்து வந்தாரென்றால் இதனினும் சிறந்த ஒன்று உளதோ? அத்தகைய இடத்திலே மீண்டும் அதாவது கடவநாட் சென்று, இன்றேனும் அப்பணி மேற்கொள்ளப் படுகிறது என்றால் அது நம் பெருமையல்ல, சைவத்தின் பெருமை யாகும். அத்தகைய நற்பணியிலே நாமும் பங்கு பெற்றுப் பிறவிப் பயனும் இனியும் பிறவாப் பயனை இறைவன் அருளால் அடையப்பெற்று இன்புறுவோமாக!

# இறையறிவு

(திரு. பாஸ்கரத் தொண்டமான் M. A. அவர்களின்
சொற்பொழிவின் சுருக்கம்)

ஒரு பழைய கோட்டைக்கு அழைப்பு வந்தது. வெகு ஆவலுடன் சென்றேன். இந்தியாவிலேயே மிகப் பெரிய மாட்டுப் பண்ணை அங்கே உண்டு என்று அறிவேன். இந்தியாவில் மட்டும் அல்ல, உலகத்திலேயே மிகச் சிறந்த பண்ணைகளில் அது ஒன்று என்ருல் மிகையல்ல. ஆகவே அதனைப் பார்த்து அதன் அருமை பெருமைகளை அறிய வேண்டாமா. அதன் தலைவர் பட்டக்காரரே என்னை வரவேற்று எனக்கு ஒவ்வொன்றையும் காட்டினர். அப் பண்ணை மிகச் சிறந்த முறையில் வைக்கப்பட்டிருந்தது. அங்கே ஆயிரக் கணக்கான மாடுகளும், பசுக்களும், கன்றுகளும் மிகச் சீரிய முறையில் பராமரிக்கப்படு கின்றன. அவ்வித வாய்ப்பு வேறு பண்ணைகளில் காண் பது அரிது. தலைமுறை தலைமுறையாக அப்பண்ணை வைக் கப்பட்டு வருவதாலே சிறந்த அனுபவம் பெற்ற வகையில் அது நடத்தப்பட்டு வருகிறது. மாடுகள் ஒரு இடத்தில் கட்டப்படும். பசுக்கள் வேறிடத்தில் கட்டப்படும். கன்றும் மற்ெருரு தொழுவத்தில் கட்டப்படும். மேய்ச்சல் நிலங் களும் அதுபோலவே தனித்தனியாக இருக்கும். அவை களுக்குத் தகுதியான தீனிகள் கொடுக்கப்படும். அந்தந்த வேளைகளில்தான் கொடுக்கப்படும். நோய் அணுகாதநிலை கள் அறிந்து அவ்வாறு பராமரிக்கப்படும். இந்த வகையில் மிகச் சிறப்பு வாய்ந்தது பழைய கோட்டை எஜமான் புதூர்ப் பெரும் பண்ணை. அது கொங்கு மண்டலத்தில் காங்கேய நாட்டில் நொய்யலாற்றின் கரையில் உள்ளது. பண்டு தொட்டு இதே சிறப்பில் அப்பண்ணை நடந்து வருகின்றது.

ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் ஆட்காரர் கள் பசுக்களிடம் சென்று பால் கறப்பது உண்டு. ஒவ் வொரு பசுவண்டையும் ஒவ்வொரு ஆள் ஒவ்வொரு பாத் திரத்துடன் நிற்பான். அப்போது தொழுவத்தில் இருக் கும் கன்றுக் குட்டிகளைப் பட்டி காப்பவர்கள் அவிழ்த்து

விடுவார்கள். அவிழ்த்துவிட்ட கன்றுக் குட்டிகள் எல்லாம் கும்மாளம் போட்டுக் கொண்டும் துள்ளிக் கொண்டும் ஒரே ஓட்டமாகப் பசுக்கள் கட்டியிருக்கும் இடத்திற்கு ஓடும். அவ்வாறு ஓடி அந்தந்தக் கன்று அதனதன் தாயிடம் சென்று மடியிலே முட்டிப் பால் குடிக்கத் தொடங்கும். அது அது அதனதன் தாயை வெகு எளிதாகக் கண்டு பிடித்து விடுகிறது. ஒன்று மற்றொன்றிடம் போகாது. தாய்ப் பசுக்களும் தன்தன் கன்றையே அறிந்து பால கொடுக்கும். மற்றக் கன்றுகளை அருகிலேயே சேர்க்காது. இத்தனை ஆண்டுகளாக ஒரு பசுவாவது வேறு பசுவின் கன்றுக்குப் பால் கொடுப்பதோ, அல்லது ஒரு கன்று வேறு தாய்ப் பசுவிடம் பால் குடிப்பதோ கண்டதே இல்லையாம். இந்தத் தவறுதல் ஒரு நாளும் ஏற்பட்டதில்லை என்று பட்டக்காரர் உறுதியாகச் சொன்னார். நானும் நேரில் பால் குடிப்பதைக் கண்டேன். மிக வியந்தேன். இந்தப் பசுக்களுக்கு உள்ள அறிவு என்ன என்று வியந்தேன். கம்பநாட்டாழ்வான் இந்தக் காட்சியை எப்படி அறிந்தானோ தெரியவில்லை. ஒருவேளை கொங்கு நாட்டிற்குச் சென்றபோது பழைய கோட்டைக்குச் சென்று நேரில் கண்டானோ என்னவோ? இந்த உண்மையை வெகு உருக்கமாகத் தன் காவியத்தில் கூறுகிறான்.

> " தாய்தன்னை அறியாத கன்றுஇல்லை ;
> தன் கன்றை ஆவும் அறியும் "

என்று கூறுகிறான். எவ்வளவு அழகான அனுபவக் காட்சி. நாம் இதனை அறிகிறோமா ? அறிந்தாலும் இத்தனை எளிதாகவும் அழகாகவும் கூறுகிறோமா ?

ஒரு செய்தியை உள்ளவாறு சொல்வது பெரிதல்ல. அதனைத் தக்கபடி உவமை ஆக்கி, ஒரு பெரும் தத்துவ ஞானத்தை வெளியிடுவது மிக அரிது. அதனைத்தான் கம்பன் இங்கே எடுத்துக் கூறுகிறான். இதனைப் படித்தோர் அவனை என் ஆழ்வார் என்று கூறமாட்டார்கள் ? உலகுக்கு இறைவன் தாய். உயிர்கள் மக்கள். தாய்ப் பசுவைப் போல் இறைவன் இருக்கிறான். கன்றுகளைப் போல் உயிர்கள் இருக்கின்றன. ஆனால் இந்த ஒப்புவமை செயல் வகையில் முற்றுவமை அல்ல. தாய்ப்பசு தன் கன்றை

அறியும்; அது போல் கன்றும் தாய்ப் பசுவை அறியும். அவைகளைப் போல் இறைவனும் (பதி) உயிரும் (பசு) இருக்கின்றனவா? இல்லை என்கிறான் கம்பன். தாயாகிய இறைவன் தன் கன்றுகளாகிய உயிர் முதலிய பொருள்களை அறிகிறான். ஆனால் கன்றுகளாகிய பொருள்கள் தாயாகிய இறைவனை அறிவதில்லை. அஃறிணைப் பொருள்கள் இறைவனை அறியமாட்டா. உயர்திணைப் பொருள்களாகிய மானிடர்களும் இறைவனை அறிகிறார்களா? இல்லை. எந்த மானிடன் இறைவனை அறிந்தான்? மணி வாசகனாரும்

பாடுதல் ஆடுதல் அல்லால் உன்னைக்
கண்டறிவார் இல்லை.

என்கிறார் அல்லவா? அது போலக் கம்பனும்,

“ உலகின் தாயாகிய ஐய !
நீ அறிதி எப்பொருளும்
அவை உன்னை நிலை அறியா”

என்று கூறுகிறான். இதை உவமையில் விளக்கி விட்டு இதுவும் உன் மாயமே என்று கூறி

“மாயை இது என் கொல்லோ”

என்று வியக்கின்றான். இதில் எத்தன்மையான உயர்ந்த ஞானம் இருக்கிறது. நாம் உலக வழக்கில் அறிந்த ஒன்றை வைத்துக் கொண்டு; எத்தனை உயர்ந்த உண்மையை விளக்குகின்றான் கம்பன்?

இனி முழுப் பாடலையுங் கூறுவாம் :—

“ தாய்தன்னை அறியாத
கன்று இல்லை; தன் கன்றை
ஆவும் அறியும்; உலகின்
தாயாகிய ஐய!
நீ அறிதி எப்பொருளும்,
அவை உன்னை நிலை அறியா !
மாயை இது என் கொல்லோ !”

தான் எடுத்துக் கொண்ட காவியத்தின் இடையில் இந்த அற்புத உயர் ஞான தத்துவத்தைக் கம்பன் விளக்குகிறான் அல்லவா?

---

# தேசம் உய்ய வந்தவர்

புலவர் - முருகவேள், பி. ஓ. எல்.

"ஆசனத்திற் பூசனைகள் அமர்வித்து, விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி, மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செய, அவரும் அதுநேர்ந்தார்!"

(அப்பூதியார் - 21)

**முன்னுரை :** "தேசம் உய்ய வந்தவர்" என்னும் தொடரைக் கேட்டதும், நம்மிற் பெரும்பாலோர் காந்தியடிகளையே இஞ்ஞான்று பெரிதும் நினைவு கூர்வர். ஆயினும், இத்தொடரைச் சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசரைக் குறித்தற்கு மேலைத் திருப்பாட்டில் வழங்கியுள்ளார். இதனால், திருநாவுக்கரசர்க்கும் காந்தியடிகளுக்கும் இடையே பலதிற ஒப்புமைகள் இருக்தல் கூடும் என்பது புலனாகின்றது! பலநூற்றாண்டுகளுக்கு முன்பு நம் தமிழகத்தில்விளங்கியிருந்த திருநாவுக்கரசரின் இணையற்ற பெருமாட்சிமையினை, இவ்விருபதாம் நூற்றாண்டில் நம் கண்முன்னர் நாம் காண வாழ்ந்திருந்து மறைந்த காந்தியடிகளின் சிறப்பினோடு ஒருபுடை வைத்து ஒப்பிட்டு உணர்ந்துகொள்ள முயலுவது, இக்கால நிலைக்குப் பெரிதும் இயைந்ததொன்றாய் மிகவும் நலம் பயக்கும். எனவே, அதுபற்றி இயன்றவரை ஈண்டுச் சிறிது ஆராய்வோமாக!

**ஒப்புமைகள் :** காந்தியடிகள் நமது இந்திய தேசம் உய்ய வந்தவர்; திருநாவுக்கரசரும் நம் தேசம் உய்ய வந்தவர் என்றே சேக்கிழார் பெருமானரால் பாராட்டப்படுகின்றார். இருவரும் கோடிக்கணக்கான மக்களின் மனத்தினை மாற்றி அவர்தம் வாழ்வைச் சீர்திருத்திப் புனிதமாக்கியவர்கள் இருவரும் தமது காலத்தில் மக்களின் வாழ்க்கையிலும் மனப்பான்மையிலும் மிகச்சிறந்த பெரியதொரு மாற்றத்தினை விளைவித்து, நாடு முழுதும் உள்ள மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உணர்ச்சி பெற்றுப் பின்பற்றி நின்று ஒழுகுமாறு, செய்தற்கரிய பெருஞ் செயல்களைச் செய்தவர்கள்.

காந்தியடிகளை நினைக்கும்போது முதுமையிலும் அழகு முதிர்ந்து அருள் கனிந்து, நம்மனோரை மயக்கி மகிழ்விக்கும் அவர்தம் இனிய புன்முறுவலும், எளிய உடையும், இரக்கம் மிக்க இயல்பான பண்பும் பிறவும் நமது மனக்கண்முன்னே நிற்கின்றன; திருநாவுக்கரசரும் இவ்வாறே "சிந்தை இடையறா அன்பும், திருமேனி தன்னில் அசைவும், கந்தை மிகையாம் கருத்தும்" உடையவராக விளங்கி இருந்தார். இருவரும் சிறிதேறத் தாழ எண்பதாண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்திருந்தனர்.

காந்தியடிகள் பேச்சு வன்மையும் எழுத்து வன்மையும் மிக்குத் திகழ்ந்திருந்தார்; அங்ஙனமே திருநாவுக்கரசரும் "பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப் பதிகத்தொடை பாடிய பான்மையினல், நாவுக்கரசு என்று உலகேழினும் நின் நாமம் நயப்புற மன்னுக" என்றபடி, நாவன்மையும் பாவன்மையும் வாய்ந்து விளங்கினர். காந்தியடிகளை இன்ஞான்று நாம் அனைவரும் "நாட்டின் தந்தை" (The Father of the Nation) என்று பாராட்டுகின்றோம்; அங்ஙனமே திருநாவுக்கரசரை "அப்பர்" எனப் பண்டும் இன்றும் என்றும் தமிழகத்தார் வழிபட்டு வருகின்றனர்.

மன்பதைத் தொண்டே (Social Service) காந்தியடிகளின் வாழ்க்கையும், அதன் குறிக்கோளுமாக இருந்தது: திருநாவுக்கரசரும் "தொண்டலால் துணையும் இல்லை" என்னும் துணிபினராய், "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும்உயரிய நோக்கம் உடையவராகத் திகழ்ந்திருந்தார். இன்னா செய்யாமை என்னும் "அஹிம்ஸை" (Non-Violence) காந்தியடிகளின் பேச்சும் மூச்சுமாக இருந்தது; திருநாவுக்கரசரும் "தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்று" தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் செய்யும் தண்ணளி மிக்க செம்மை வாழ்க்கையை நடத்தினர். தீண்டாதாரை "ஹரிஜனங்கள்" என்று போற்றிச் சிறப்பித்துத் தீண்டாமையினை ஒழிப்பதற்குப் பெரிதும் பாடுபட்டார் காந்தியடிகள்; அங்ஙனமே "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" எனத் திருநாவுக்கரசரும் தீண்டாமை போக்க முனைந்துள்ளார். காந்தியடிகளுக்கு "இராட்டை" (Charkha) தொண்டின் அறிகுறியாகத் திகழ்ந்தது; திருநாவுக்கரசர்க்கோ "உழவாரம்"

அத்தகையதொரு கருவியாக இலங்குகின்றது. "உடைய அரசு, உலகேத்தும் உழவாரப் படையாளி" எனச் சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசரைச் சிறப்பித்துரைத்து மகிழ்கின்ருர். இவ்வாற்ருல் காந்தியடிகளும் அப்பரடிகளும், தொழிலில் உயர்வு தாழ்வில்லை எனத் தொழிலின் பெருமையை (Dignity of Labour) உலகுக்கு உணர்த்திய பெருஞ் சிறப்பிற்கு உரியவர்களாவர் எனலாம்.

காந்தியடிகளின் "தண்டி யாத்திரை" நம் இந்திய நாட்டின் விடுதலைப்போர் வரலாற்றில் ஒரு பெருஞ் சிறப்பிடம் பெறுதற்குரியது; அவ்வாறே "ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால், மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்னும் துணிவுடன் சென்ற "திருக்கயிலை யாத்திரை" ஒரு பெருஞ்சிறப்பு நிகழ்ச்சியாய்ச் செயற்கருஞ் செயலாக அறிஞர் அனைவராலும் பாராட்டப்படத் தகுந்த தொன்ருகும். காந்தியடிகளுக்குச் சத்தியாக்கிரகம், உண்ணு நோன்பு என்பன அவர்தம் வாழ்க்கையிற் சிறந்த போர்க்கருவிகள் போல, அவ்வப்போது விளங்கிப் பயன் பட்டு நலஞ்செய்தன; அவ்வாறே "பழையாறை வடதளி" என்னும் தலத்தில், திருநாவுக்கரசரும் சத்தியாக்கிரகம் உண்ணுநோன்பு என்னும் இருபெருங் கருவிகளையும் தாமே முதன்முதற் புதிது படைத்துக்கொண்டு போராடி(Passive Resistance), அவற்றின் துணையால் தம் கருத்தும் விருப்பமும் நிறைவேறச் சிறந்ததொரு வெற்றியினைப் பெற்றருளினுர். இவ்வுண்மையினை,

"வண்ணங் கண்டு நான்உம்மை
வணங்கி யன்றிப் போகேன்என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே......"

எனச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்துரைத் திருத்தல் காணலாம். காந்தியடிகளார் தமது தொண்டின் நிலையமாகச் "சேவாகிராமம்" அமைத்துக்கொண்டிருந்தார்; அதற்கேற்பத் திருநாவுக்கரசரும் திருப்பூந்துருத்தியில் "தங்கித் திருத்தொண்டு செய்வார், தம்பிரானுர் அருள்பெற்றுத், திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஆங்கொன்று செய்தார்." சிதைந்து மறைந்துகிடந்த அத்திருமடம் மீண்டும் சிவநெறிச்

செல்வர்கள் சிலரால் புதுப்பிக்கப்பட இருக்கும் செய்தி பெரிதும் மகிழ்வதற்குரியதாகும்.

காந்தியடிகள், ஒல்லும் வகையானெல்லாம் அறவினைகளை ஓவாது, செல்லும் வாயெல்லாம் பிறர்க்குச் செய்து வரும் சிறப்பியல்புடையவராக விளங்கியிருந்தார். பொதுவாக, அவர்தம் வாழ்க்கை முழுவதுமே பிறர் நலன் கருதிப் பலதிறப் பணிகளைப் புரிவதிலேயே கழிந்தமை அனைவரும் அறிந்ததொன்று. அத்தகைய சிறந்த தொண்டின் திறனை நாம் திருநாவுக்கரசரிடமும் காணலாம். திருநாவுக்கரசர் தமது மழவிளம் பருவத்திலேயே மக்கள் அனைவரும் உவக்கும் பலதிற உதவிகளைச் செய்யும் தொண்டு நெறியிற் றலை நின்றார் என்பதனை,

" காவளர்த்தும், குளந்தொட்டும், கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும், விருந்தளித்தும்,
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும்,நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத ஈகைவினைத் துறைநின்றார் "

எனப் பெரிய புராணத்துள் சேக்கிழாரடிகள் விளக்கியருளுதல் பற்றி யுணரலாம். நாவுக்கரசரின் தனக்கென வாழாத் தகைமையினை என்னென்பது!

இம்மட்டோ! காந்தியடிகள், "போயர் போர்" "சூலு குழப்பம்" "உலக முதற் பெரும் போர்" முதலியன நிகழ்ந்த காலங்களில், தம் உயிரையும் பொருட்படுத்தாது மருத்துவப்படைப் பொறுப்பினராக (Ambulance Corps) இருந்து, புண்பட்ட வீரர்களுக்கு மருத்துவ உதவிகள் செய்தார்; அவ்வாறே திருவீழிமிழலையிற் பெரியதொரு பஞ்சம் நேர்ந்தபோது, அவ்வறகடத்தால் வருந்திய மக்களுக்குத் திருநாவுக்கரசர் பெருந் தொண்டுகள் பல செய்தார்.

" அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளாற் பெற்ற படிக்காசு,
பல்லா றியன்ற வளம்பெருகப்,
பரமன் அடியார் ஆனார்கள்
எல்லாம் எய்தி உண்க !என,
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார் !
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார் !"

எனச் சேக்கிழார் பெருந்தகை இவ்வுண்மையினை விளக்கியருளி இருத்தல் காண்க. திருநாவுக்கரசர் இங்ஙனம் ஆற்றிய மன்பதைத் தொண்டுகள் பலவாகும்.

இனி, காந்தி அடிகளின் வாழ்க்கையில் ஒரு பெரிய சிறப்பு ஏதேனும் உண்டென்றால், அஃது அவர் அரசியலுணர்ச்சியினையும், உயர்வற உயர்ந்த சமய உணர்வினையும் இரண்டற்ற தன்மையில், ஒன்று சேர்த்து இணைத்துப் பிணைத்து வைத்துத் தொண்டாற்றியமையே யாகும். இவ்வாறு, சமயத்தையும் அரசியலையும் பிறவற்றையும் பிணைத்து வைத்துத் தமிழகத்திற் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தொண்டாற்றிய பெருமைக்குரியவர் திருநாவுக்கரசர் ஆவர்! "தீமையை வெறு, ஆனால் தீயவனை வெறுக்காதே" (Hate the sin but not the sinner) என்னும் உயரிய கொள்கையின் அடிப்படையில், "இந்தியாவை விட்டு வெளியேறுக" (Quit India) என முழங்கி ஒரு பெரிய வல்லரசினை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றார் காந்தியடிகள்; அதனைப்போலவே, திருநாவுக்கரசரும் ஒரு பெரு வேந்தனை அஞ்சாது எதிர்த்துநின்று மறுத்துரைத்து,

"நாமார்க்கும் குடியல்லோம் என்றெடுத்து, நான்மறையின்
கோமானை, நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்,
தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண் டகம்பாடி,
'ஆமாறு நீர்அழைக்கும் அடைவிலம்'என் றருள்செய்தார்!"

**வேற்றுமைகள்:** இதுகாறும், திருநாவுக்கரசர்க்கும் காந்தியடிகளுக்கும் இடையே காணப்படும் ஒரு சில ஒப்புமைத் தன்மைகளை மட்டும் ஆராய்ந்து கண்டோம். இனி, அவ்விருவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகள் சிலவற்றையும் ஆராய்ந்து கண்டு மகிழ்வது நலம் பயப்பதாகும்! காந்தியடிகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, மனிதரிற் றலையான மனிதராகவிளங்கியவர்; திருநாவுக்கரசரோ, மனிதரில் தலையான மனிதராக வயங்கித் தெய்விக நிலையும் பெற்றுச் சிறந்திருந்தவர். காந்தியடிகள் இறைவன்பால் அயரா அன்பு கொண்டிருந்த பெருந்தகையார் ஆயினும், திருநாவுக்கரசர் போல இறைவனைத் தம் கண்ணார நேரே கண்டின்புறும் பெரும்பேறு பெற்றவர் அல்லர். திருநாவுக்கரசர் இறையருளாற்றலின் துணைகொண்டு, நிகழ்த்திய பல வியத்தகு

செயல்களைப் போலக் காந்தியடிகள் ஏதும் செய்திற்றிலர். காந்தியடிகள் சமய உணர்வுடைய அரசியல் தலைவராக இருந்தார்; ஆனால் திருநாவுக்கரசரோ வெறும் அரசியல் தலைவராக அன்றிச் சிறந்த சமயத் தலைவராகத் தெய்விக நிலையில் விளங்குகின்றார். காந்தியடிகளின் விடுதலை இயக்கம் ஒரு குறித்த கால எல்லைக்கு மட்டுமே உட்பட்டது; ஆனால் திருநாவுக்கரசரின் திருநெறி அருளியக்கமோ, தமிழ் நாடும் மொழியும் கலை நாகரிகங்களும் பிறவும் உள்ளளவும், என்றென்றும் நிலைபேறுற்று நின்று நிலவும் பெருஞ் சிறப்புடையது. காந்தியடிகளின் வாழ்விற்பெரும்பகுதி பயனற்ற அரசியற் கிளர்ச்சிகளிலேயே கழிந்ததாக, நம் திருநாவுக்கரசரோ வாழ்வின் முடிந்த முடிபான பயனாகிய இறையருளின்பத்திலேயே பெரிதும் திளைத்து நின்றவர். காந்தியடிகளாரின் பொன்மொழிகள் எதிர்கால மக்களுக்கு எத்துணையளவுக்குக் கிடைத்துப் பயன்படுமோ நாம் அறிகின்றிலம். ஆயின், நம் திருநாவுக்கரசரின் தித்திக்கும் அமிழ்த மொழிகளோ மிகமிகச் சிறந்துயர்ந்த கவிதை வடிவிற் கலைப் பெருங் களஞ்சியமாக என்றும் நின்று நிலவி, அன்பறிவுப் பெருவிருந்தாக மக்களனைவர்க்கும் இன்பம் அளித்து, நலம் செய்துவரும் இயல்பினவாகும்! மொழித்துறை, இலக்கியத் துறை, கவிதைத் துறை, அறிவாராய்ச்சித் துறை, வரலாறு பண்பாடு நாகரிகத்துறை என்னும் இன்னோரன்ன பல துறைகளிலும், திருநாவுக்கரசர் ஆற்றிய அரும்பெருந் தொண்டுகட்குச் சான்றாக, அவைகள் என்றென்றும் மங்காத பேரொளி வீசித் திகழாநின்று, நம்மனோர்க்கு வழி காட்டிப் பயன்விளைத்து வரும் அழிவில்லாத பெருஞ்செல்வ வைப்புக்களாக அமைந்து திகழ்கின்றன. இவைகளையெல்லாம் கருதி யுணரலுறின் “அப்பாலும் அடிச்சார்ந்தார்” எனப் போற்றத் தகுந்த காந்தியடிகளுக்கும், திருநாவுக்கரசர்க்கும் உள்ள இடையீடு மிக மிகப் பெரியதாகும் என்றுணரலாம்.

**முடிவுரை :** இதுகாறும் கூறிவந்தவாற்றால், நம் “தேசம் உய்ய வந்தவர்” தம் பெருமைகளை யுணர்ந்து, அவர் தம்மைத் தக்காங்குப் போற்றிப் பின்பற்றி ஒழுகி, நம்மனோர் அனைவரும் நலம் பெற்று வாழ்வோமாக!

——

# மாணிக்கவாசகர்

வித்துவான் - பாலூர் - கண்ணப்ப முதலியார்

மாணிக்கவாசகனார் மாபெரும் புலவர் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. அவர் பரந்த புலமை பெற்றிருந்தார் என்பது, அவரால் இயற்றப்பட்ட திருவாசகத்தாலும் திருக்கோவையாராலும் நன்கு புலனாகின்றது. அவர் இலக்கண இலக்கியங்களில் நன்கு பயிற்சி பெற்றவர்.

" வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூல் ஆகும் "

என்பது தொல்காப்பிய நூற்பா. இந்நூற்பாவில் முழுமுதற் பரமனைக் குறிக்க "முனைவன்" என்னும் சொல் பெய்யப்பட்டிருக்கிறது. இச்சொல்லினை நமது வாதவூர் அடிகளார் தம் திருவாசகத்தில் பரமனைக் குறிக்க எடுத்து ஆண்டுள்ளார்கள்.

" முனைவனே முறையோநான் ஆனவாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயினானே "

என்றும்,

" முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே "

என்றும், 'சுட்டறுத்தல்' என்ற இடத்து ஆளப்பட்டிருப்பதைக் காண்க.

ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியத்தில், மற்றுமோர் இடத்தில்,

" உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று "

என்ற சூத்திரம் மிளிர்வதைக் காணலாம். இச் சூத்திரத்தினை அப்படியே எடுத்துக்கொண்டு, மணிமொழியார் தமது திருக்கோவையாரில்,

" தாயிற் சிறந்தன்று நாணுத்தைய லாருக்கந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் தோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்

கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடும்எம் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே"

என்று பாடி அமைத்திருப்பதை அறிதல் வேண்டும்.

அகநானூற்றில்,

"கோழிலை வாழைக் கோள்மிகு பெருங்குலை
ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடு ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியா துண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும்நாட"

என்ற பாடல் வருகின்றது.

இப்பாடற் பொருளை நன்கு உளத்தில் கொண்டே மணிமொழியார்,

"மையார் கதலி வனத்து வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா தயின்றிள மந்திகள் சோரும் இரும்சிலம்பா
மெய்யா அரியதென் அம்பலத் தான்மதியூர் கொள்வெற்பின்
மொய்யார் வளர்இள வேங்கைபொன் மாலையின் முன்னினவே"

என்று பாடியருளினர்.

கற்றோர் ஏத்தும் கலித்தொகையில்,

"பலவுறும் நறும்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செயும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செயும்
தேருங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கனையளே
எழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செயும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கனையளே"

என்னும் சுவை மிகுந்த பாடல்கள் காணப்படுகின்றன. இச்சுவை மிகுந்த கவிகளில் மூழ்கிய நம் திருவாதவூரர், தமது நூலாகிய திருக்கோவையாரின்கண் இம் மூன்று

தாழிசைகளின் சொல்லும் பொருளும் தோய்ந்திருக்கும் வண்ணம்,

“ சுரும்பிவர் சந்தும் தொடுகடல் முத்தும்வெண் சங்கும்எங்கும்
விரும்பினர் பால்சென்று மெய்க்கணி யாம்வியன் கங்கைஎன்னும்
பெரும்புனல் சூடும்பிரான் சிவன்சிற்றம் பலம்அனைய
கரும்பன மென்மொழி யாரும்அந் நீர்மையர் காணுநர்க்கே ”

என்று இசைத்தருளினார்கள்.

உலகம் ஏத்தும் ஒப்புயர்வற்ற நூலாகிய திருக்குறளில்,

“ தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை ”

என்ற குறள் இருப்பதை நாம் அறிவோம். அக்குறளின் பொருளன்றோ,

“ தெய்வம் பணிகழ லோன்றில்லைச் சிற்றம்பலம் அனையாள்
தெய்வம் பணிந்தறி யாள்என்றும் நின்று திறைவழங்காத்
தெவ்வம் பணியச்சென் றாலும்மன் வந்தன்றிச் சேர்ந்தறியான்
பௌவம் பணிமணி அன்னார் பரிசின்ன பான்மைகளே ”

என்று பாடச் செய்தது.

மேலும் திருக்குறள் நூலில்,

“ ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் ”

என்ற குறட்பாவும் உளது. இக் குறட்பாவை நினைவிற் கொண்டுதான் ஆளுடைய அடிகளார்,

“ யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பலத் தான்அமைத்த
ஊழின் வலியதொன் றென்னை யொளிமே கலையுகளும்
வீழும் வரிவளை மெல்லிய லாவிசெல் லாதமுன்னே
சூழும் தொகுநிதி யோடன்பர் தேர்வந்து தோன்றியதே”

என்று இப் பாடலைப் பாடி முடித்தனர் என்க.

மேலும் நம் ஆளுடைய அடிகளார் பாடித் தந்த திருக்கோவையாரில்,

“ மீண்டார் எனஉவந் தேன்கண்டு நும்மைஇம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயின ரேபுலி யூர்எனைநின்
றாண்டான் அருவரை ஆளியன் னானைக்கண் டேன்அயலே
தூண்டா விளக்கனை யாய்என்னை யோஅன்னை சொல்லியதே ”

என்ற அரும்பெருங் கவியில் தமிழ் நாட்டு மக்களின் நாக கரிப் பண்பாடு அமைந்திருத்தலைக் காணலாம். இத்தகைய நாகரிகப் பண்பாட்டை இப்பாடலில் நம் திருவாதவூரார் பாடிக் காட்டுதற்குப் பெருந்துணையாக இருந்தது,

"பிறன்மனை நோக்காத பேர்ஆண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"

என்னும் குறட்பா அன்றோ ?

இன்னோரன்ன காரணங்களால் இவர் புலவராதலினால் தான் இவரது வாக்குகள் மணிமொழிகளாயின. இதனால் இவர் மாணிக்கவாசகர் என்ற தீட்சா நாமும் இறைவரால் கொடுக்கப்பெற்றனர். மேலும், இவர் பாடிய திருப்பாடல் களை இறைவரே விழைவுற்றுத் தம் திருக்கரத்தால் எழுதியும் அருளினர். இங்ஙனம் இறைவர் எழுதினமைக்குக் காரணம் பெரும் புலவர் பாடிய பாடல்களைத் தாம் எழுதினால் புகழ் கிடைக்கும் என்பதனாலாகும் என்று கற்பனைசெய்து, துறை மங்கலம் சிவப்பிரகாசர் தாம் பாடிய நல்வர் நான்மணி மாலையில்,

"நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ !
மனம்நின்று உருக்கும் மதுர வாசக !
கலங்குறு புலனெறி விலங்குறு வீர !
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனும் உணரான் ; அஃதான்று
கண்களோ ஒன்று காலையில் காணும்
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்
ஆயினும் தன்னைநீ புகழ்ந்து உரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியா என்பணி வோனே."

என்று இவ்வாறு குறிப்பிட்டு அருளினர். இந்த அளவில் கூத்தரசர் திருவாசகத்தை எழுதியதோடு அமையாமல் "பாவை பாடின வாயால் ஒரு கோவை பாடுக" என்று வேண்டி, நம் மாணிக்கவாசகரைக்கொண்டு தம்மீது திருக் கோவையாரையும் பாடும்படி செய்துகொண்டனர். மணி மொழியாருடைய வாசகங்கள் மணிபோன்றவை என்ப

தோடு இல்லாமல், தேன்போலச் சுவைக்கக்கூடிய அள வுக்கு இருக்கின்றமையால் நாம் தனித்துப் பொழுதுபோக்க நேரிடும்போது, அப்பொழுதினை வீணேகழிக்காமல் நூலைப் படித்துக் கவிச் சுவையினைத் துய்த்துக் காலத்தைப் போக்க வேண்டு மென்று கருதியே, மணிமொழியார் நூலை விரும்பித் தம்மிடம் வைத்துக்கொண்டனர் என மனேன் மணியம் ஆசிரியர் திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய பாட்டையும் நினைவு கொள்வோமானல், திருவாதவூரர் பொய்யடிமை இல்லாத புலவர் என்றும், பெரும்புலவர் என் றும் கூறப்படுவதன் உண்மை மேலும் உறுதிப்படுவதாகும். திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய பாட்டு,

"கடையூழி வருந்தனிமை கழிக்கஅன்றோ அம்பலத்துள்
உடையவருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே"

என்பது.

---

# ஏயர்கோன் கலிக்காம நாயனர்

M. P. தியாகராஜன்

"அன்பே சிவம்" என்னும் சைவ சமய உண்மைக் கெடுத்துக் காட்டாக இருக்கும் இவ்வடியார் சரித்திரம் நாள்தோறும் சிந்திக்கத் தக்கதாகும். இவர் ஏயர்கோக் குடியில், கலிக்காமர் என்னும் பெயர் பூண்டு "அடிபணி வாரடி சார்ந்து அவர் பணி போற்றுதல் செய்யும்" சில முடையவர். சைவசமயாசாரியராய் விளங்கிய சுந்தர மூர்த்தி சுவாமிகள், தமக்கும் பரவையார்க்கும் ஏற்பட்ட பிணக்கைத் தீர்க்க வேண்டிச் சிவபெருமானையே தூது போம்படி செய்தமைக்கு மிகவும் மனம் பொருதவராய் "யாவர் இச்செயல் புரிந்தனர்" என்று அவர் மேல் பெரிதும் பகைமை கொண்டு வாளா இருந்தனர்.

"நாதன் நம்பிக்குத் தூது" சென்ற தத்துவத்தைக் கலிக்காமர் உணர்ந்தாரில்லை. அன்பெனும் பான்மையைக் கெடுக்கும் பகைமை ஒரு சிறிதும் அடியவருள்ளத்திலிருக் கக்கூடாது என்பதை அவர் எண்ணினரில்லை. மெய்ப் பொருள் நாயனர் தம்மை வஞ்சகமாகக் கொன்றவரைத் தம் சுற்றத்தவரும் தனக்குப் பின் துன்புறுத்துதல் கூடாது என்று அவரை ஊருக்கு வெளியே செல்லும் வரை காவ லுடன் வழிவிட்டு வரும்படி கட்டளையிட்டு, "செய்தவ

வேடங்கொண்டு வென்றவற் கிடையூறின்றி விட்டனன்" என்று கேள்வியுற்ற பின் உயிர் விடுத்தனர். ஏனாதிநாத நாயனார், தன்னுடன் வாட் போரிட்ட எதிரியின் சிவ வேடத்தைக் கண்டு "நிராயுதரைக் கொன்றார் எனுந் தீமை எய்தாமை வேண்டுமிவர்க்கு என்று அடர்ந்து நேர்வார் போல்" நேர்ந்து எதிரியின் கருத்து முடியும் வண்ண மிடங் கொடுத்தார். அது சமயம் அவருடைய திருவுள்ளம் என்ன நினைந்ததோ என்று சேக்கிழாரே வியந்து கூறுகிறார். காரைக்காலம்மையார் தம்மை விட்டு நீங்கிய கணவர்மீது வருத்தம் கொள்ளவில்லை. தம்முடைய உடம்பின் வனப் பைத்தான் குறைத்துக் கொண்டனர். அது போன்ற வெறுப்பற்ற நிலையே அடியவர்களின் பண்பாகும்.

விருப்பு வெறுப்பு ஒரு சிறிதேனும் இருக்கும் வரை நமக்கு உண்மை விளங்காது என்பது பெரியோர்களது முடிவு. "யான் தானெனும் சொல்லிரண்டுங் கெட்டா லன்றித் தோன்றாது சத்தியம்" என்பது அருணகிரியார் வாக்காகும். யான் தானெனும் முனைப்பால் வருவதே விருப்பும் வெறுப்பும். அதுவுமன்றிப் பகைமையே பல பிணிகளுக்கு ஏதுவாக இருக்கின்றதென மனோதத்துவ விஞ்ஞானிகள் இப்போது நிரூபித்துப் பல உதாரணங்களைக் கொண்டு பத்திரிகைகளில் எழுதுவதைக் காண்கிறோம். "மசஹாருடானுகுச்சி" எனும் ஒரு ஜப்பானியர், மனத்தின் எண்ணங்களின் தடத்த உருவமே இவ்வுடலென்றும் உடலின் நோய்கள் யாவும் எண்ணங்களின் விகற்பங்களே யாகும் என்றும் எழுதுவதோடு, பல பிணியாளர்களின் மனத்தைப்பண்படுத்தி நோய்களைக் குணப்படுத்தி வருகிறார். தாய் தகப்பனார் பிணக்குற்று வாழ்க்கை நடத்துவார்க ளானால், அவர்களுக்குச் சிறுநீர்க் குடலிலோ, ஹிருதயத் திலோ நோய் காணுவதோடு அவர்களுடைய குழந்தை களும் அடிக்கடி நோய்வாய்ப்படுமென்றும் எழுதுகிறார். அவரால் குணப்படுத்தப்பட்ட ஒரு பெண்மணியின் சரித் திரத்தை உதாரணமாக இங்குக் கூறுவது கவனிக்கற் பாலது. அவள் தன் மாமியாரிடம் வெறுப்புக் கொண்டு தாய் வீட்டிலிருப்பதையே விரும்பினவளாய் வாழ்க்கை நடத்தத் தனக்குக் காது வலி கண்டு துன்புறுத்தப்பட்ட துடன், அவளுக்குப் பிறந்த குழந்தையும் நடக்கச் சக்தி

யின்றி யிருந்தது. வைத்தியர்களால் அவை குணப்படாமையால் அந்த ஜப்பானியரிடம் சிகிச்சைக்குச் செல்ல, அவரும் அவள் கொண்டிருந்த வெறுப்பு எண்ணங்களே உணர்ந்து, அவளுக்குப் பகைமையின் வன்மையை யுணர்த்தி அவளுடைய மாமியாரையும் அவளேயும் ஒற்றுமைப்படுத்தி விட்டனர். அது முதல் அவளுடைய நோயும் நீங்கப் பெற்று அவளுடைய குழந்தையும் நடக்கும் வன்மை பெற்றதென ஒரு ஜப்பானியப் பத்திரிகையில் தன் அனுபவத்தை விளக்கியிருக்கிறர்.

எனவே பற்றற்ற சிவபெருமானின் அருளே விழைந்து வாழும் அடியவர்களுக்குப் பகைமை எள்ளளவேனும் இருத்தல் கூடாது என்ற கருணே கூர்ந்தே சுந்தரர்க்கும் பரவையார்க்கும் பரமன் தூது சென்றனர். கலிக்காமர் அதை யுணராமல் சிவபெருமான் மேல் கொண்ட அன்பின் காரணமாக அவரைத் தூதுவிடுத்த சுந்தரர் மேல் பகைமை கொண்டார். இறைவன் அவரைத் திருத்த வேண்டியே "ஏயர்கோன் கலிக்காமருக்கு மேனி வாடுறு சூலே தன்னே அருளியதோடு" அந்நோய் "வன் தொண்டன் தீர்க்கிலன்றி முந்துற ஒழியாது" என்றும் அவருக்குத் தெரிவித்தார். அப்போதும் கலிக்காமர், சுந்தரர் தன் நோயைத் தீர்ப்பதைவிட அந்நோயால் வருந்துவது மேலென்றெண்ணினர். ஆனல் சிவபெருமான் சுந்தரரிடம் சென்று "இன்று நம் ஏவலாலே ஏயர்கோன் உற்ற சூலேயைச் சென்று நீ தீர்ப்பாயாக" என்று பணித்தார்.

உடனே சுந்தரர் ஏயர்கோனிருப்பிடம் சென்றனர். அவருடைய வருகையைச் சிலர் ஏயர் கோனடியவருக்கு முன் கூட்டித் தெரியப்படுத்த சூலே தன்னே உற்ற இவ்வயிற்றினேடுங் கிழிப்பேனென்று" அவர் தன் உடைவாளினல் "செற்றிட உயிரோடும் சூலேயுந் தீர்த்துக்கொண்டார்." அவருடைய இல்லாளும் தன் கணவரோடு போவதைத் துணிந்து புரியுங்காலே, சுந்தரர் தம் இல்லம் நெருங்கிவிட்டதை யுணர்ந்தார். உடனே வரும் சமயாசாரியரை வரவேற்க விழைந்தவராய் "ஒருவரும் அழுதல் செய்யா தொழிக" என்று அவ்வம்மையார் ஏற்பாடு செய்து விட்டு, அலங்காரக் கோலத்துடன் முறைமையோடு சிவனடியாராகிய சுந்தரரை வரவேற்று இல்லத்திருத்திப் பாதபூசை முதலிய வழிபாடுகள்

நடத்தினர் “ என் மனம் தெருளாதின்னம் ஏயர்கோனைக் காண வேண்டுமென்று” விண்ணப்பித்தனர் சுந்தரர். அவ் வம்மையாரும் “கணவரிருந்தகோலத்தைக் காண்பித்தனர்”.

தாம் காலந் தாழ்த்து வந்தோமோ என்று அஞ்சிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏயர்கோன் கையிலிருந்த உடை வாளை எடுத்துத் தம்மையும் அவ்வடியார் செய்த வண்ணம் செய்யத் துணிந்தபோது இறைவனின்னருளால் ஏயர் கோன் உயிர்த்தெழுந்து சுவாமிகளிடமிருந்த வாளை வாங்கிக் கொண்டு, அவர்களுடைய தாளில் வீழ்ந்து வணங்கலுற்றார். சுந்தரரும் அவர்களுக்கு வணக்கஞ் செலுத்தி அவருடன் சில நாள் தங்கி விடைபெற்றனர். இந்த அதிசயங் கண்டு புவனம் போற்ற வானோர் மலர் மாரி பொழிந்தனரெனச் சேக்கிழார் தெரிவிக்கின்றனர்.

இவ்வடியாரின் சரித்திரத்தால் நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது, சிவபக்தியில் சிவபிரானிடம் மட்டும் நாம் அன்பு பாராட்டினல் போதாது என்றும், அவரை அன்பால் வழிபட வேண்டுமெனில் அவருடைய அடியவர்களிடத்தும், எவ்வுயிர்களிடத்தும் அன்பாக இருக்க வேண்டும் என்ப தாம். இதனல் புலாலுண்ணல் சைவ சமயத்திற்கு முற்றும் புறம்பென உணர்தல் வேண்டும். தம் அடியவர் கள் ஒரு பகைமை கொண்டிருந்தமையால் சிவபிரான் தாமே வந்து அப்பகைமையைப் போக்கினர். ஆனல் சுய நலங் கொண்டு மக்கள் கொள்ளும் வெறுப்பெண்ணங் களுக்கு அளவேயில்லை. காலை எழுந்தது முதல் படுக்கைக்குப் போகும் வரை பல தாக்குதல்களாலும், மனம் பகைமைத் தன்மையைத் தினம் வளர்ப்பதனல் மக்களிடையே புதிய புதிய நோய்கள் வைத்தியர்களும் கண்டு பிடிக்க முடியாத அளவுக்குப் பெருகிக் கொண்டு வருகின்றன. நோயின் பெருக்கம் மக்களின் வெறுப்புணர்ச்சியின் பெருக் கத்தையே காட்டுகிறது. இந்த நாயனரின் சரித்திரத்தை அடிக்கடி சிந்திப்போமானல் மனம் தூய்மை யடைந்து அன்பின் பேற்றை யடைவோம். திருவள்ளுவர் தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய் என்று

“ இன்ன செய்தாரை ஒருத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் ” (குறள்)

எனக் கூறுவதும் மனத்தூய்மைக்கேயாம்.

# திருவாலவாய்க் கட்டளை*

பதி, பசு, பாசம்—இம்மூன்றும் அநாதி நித்தியம்.

## 1. பதி இலக்கணம்

**ப**தி ஒன்றாய், பரிபூரணமாய், அறிவுக்கு அறிவாய், நின்மலமாய், உயிருக்கு உயிராய், குறியும் குணமும் இல்லாததாய், அருவும் உருவும் அருவுருவுமுமாய், அல்லாததுமாய், அகண்டிதமாய், ஆநந்தமாய் விளங்குவது. இங்ஙனம் விளங்குகிற பரமசிவமும், பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி என்னும் பஞ்ச சத்திகளாகிய அருளும், பின்னமின்றிச் சூரியனுங் கிரணமும் போல ஒன்றாயிருக்கும்.

இவ்வாறிருக்கிற பரமசிவம் ஆன்மாக்களை இரட்சிக்கும் பொருட்டு, அருவமாகிய சிவம் சத்தி நாதம் விந்து நான்கும், அருவுருவமாகிய சதாசிவம் ஒன்றும், உருவமாகிய மகேச்சுரன் உருத்திரன் இருவரும், இவர்கள் அதிகாரத்தால் நடக்கும் பிரம விஷ்ணுக்கள் இருவரும், ஆக ஒன்பது மூர்த்திகளுமாய்,† உபாதானத் திரயங்களைக் கொண்டு, சிருட்டித்தும் திதித்தும் சங்கரித்தும் திரோபவித்தும் அநுக்கிரகித்தும் இங்ஙனம் பஞ்ச கிருத்தியங்களைச் செய்யா நிற்கும். எங்ஙனஞ் செய்யுமெனின், தன்மை முன்னிலை படர்க்கையாக நின்றியற்றும்.

இவற்றுள் தன்மை—பரிபூரணமா யிருக்கை. முன்னிலை—இச்சா ஞானக் கிரியைகளா யிருக்கை. படர்க்கை—மனம், புத்தி, அகங்காரம், சித்தம், உள்ளம் ஆக - ௫; அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் ஆக - ௫; பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் ஆக - ௫, ஆகிய பதினைந்து பிரகாரமா யிருக்கை.

---

*1872, 1899 ஆண்டுகளில் திருமயிலை முருகேச முதலியார் பார்க்க, ஊ. புஷ்பரதச் செட்டியாரது கலாரத்நாகர அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்ட பதிப்புக்களைத் தழுவியது.—நீ. கி. நா.

†உபாதானத் திரயமாவது,—சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை ஆகிய முதற்காரணங்கள் மூன்று.

பிரபஞ்சம் இவ்விடங்களில் எவ்வாறு காரியப்படும் எனின், இவற்றுள் காரணங்களே அக்கரங்கள் செலுத்த, மூர்த்திகளே இச்சா ஞானக்கிரியைகள் செலுத்த, இங்ஙனங் காரியப்படும். இவ்வாறு பிரபஞ்சத்தைக் காரியப் படுத்து கையிலேயும் அந்தச் சிவம் அதில் தாக்கற்று நிற்கும்.

## 2. பசு இலக்கணம்

ஆன்மாக்கள்,—விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும்.

விஞ்ஞான கலர்,—அஷ்டவித்தியேசுரர், அணுசதாசிவர், சத்தகோடி மகாமந்திரர். அவர்கள் ஆணவமலம் ஒன்றே உடையவர்கள். இவர்களுக்குச் சுத்த மாயா தத்துவம், தநு கரண புவன போகமாயிருக்கும். இவர்களில் பக்குவர்க்குப் பரமசிவம் அநுக்கிரகிக்கும் முறைமையாவது, அறிவினின் றுந் திருவருளுதிப்பித்து ஆணவமலத்தைப் போக்கி யிரட் சிப்பதாம்.

பிரளயாகலர்,—நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களும் புவனகர்த்தர்களுமாயிருப்பர். இவர்கள் ஆணவம் கன்மம் ஆகிய இரண்டு மலமுடையவர்கள். இவர்களுக்கு அசுத்த மாயா தத்துவம் தநு கரண புவன போகமாயிருக்கும். இவர்களில் பக்குவர்க்கு அநுக்கிரகிக்கும் முறைமையாவது, அந்தப் பரமசிவம் மான் மழு சதுர்ப்புயம் காளகண்டம் திரிநேத்திரங்களோடு திருமேனிகொண் டெழுந்தருளி இரு மலத்தைப் போக்கி யிரட்சிப்பதாம்.

சகலர்,—பிர்மா விஷ்ணுமுதல் கிருமி யீருக வுள்ளவர் கள். இவர்கள் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மல முடையவர்கள். இவர்களுக்குப் பிரகிருதி தத்துவம், தநு கரண புவன போகமா யிருக்கும்.

இவ்ற்றுள் தநு,—சராயுசம் அண்டசம் சுவேதசம் உற் பீசம் ஆகிய நால்வகை யோனிகளிலும் பிறப்பதாய், தேவர் பதினொரு (11) நூருயிரமும், மானிடர் ஒன்பது (9) நூருயிர மும், தாவரம் பத்தொன்பது (19) நூருயிரமும், மிருகம் பத்து (10) நூருயிரமும், பறவை பத்து (10) நூருயிரமும், நீர்வாழ்வன பத்து (10) நூருயிரமும், ஊர்வன பதினைந்து (15) நூருயிரமும் ஆகிய எழு வகைத் தோற்றத்திலும்

எண்பத்துநான்கு (84) லட்சம் யோனி பேதமாயிருக்கும். அத் தநு தூலமாகவும் சூக்குமமாகவும் காரணமாகவும் இருக்கும். அவைகளுக்கு ஆயுசு, க்ஷணம் முதலாக அநேக முள.

கரணம்,—அத் தநுவுக்கேற்ப நாநாவிதங்களாயிருக்கும்.

புவனம்,—இருநூற்றிருபத்து நான்கிலு (224) முள்ள ஊரும் நாடும் தேயமுமாய்ப், புண்ணிய தன்மமுடையவர்களுக்குச் சுவர்க்காதி பதங்களுமா யிருக்கும்

போகம்,—அவரவர் கன்மத்துக் கேதுவாய், உண்பன தின்பன குடிப்பன கடிப்பன நக்குவன விழுங்குவன உடுப்பன முடிப்பன பூண்பன பூசுவன கொடுப்பன வாங்குவன காண்பன கேட்பன நடப்பன படுப்பன பெண்டு பிள்ளை சுற்றம் பொன் மணி, இவை முதலிய பிரபஞ்சமாயிருக்கும்.

இனி இவர்கள், சூக்கும தேகத்தைப் பொருந்திக் கன்மத்துக் கீடாகிய ஸ்தூல தேக மெடுத்து, எடுத்த தேகமே தானைப் புண்ணிய பாவங்களை ஆர்ச்சித்துச், சுவர்க்க நரகங்களிலே போக்குவரத்து உடையவர்களாயிருப்பர்.

இவர்களில் பக்குவர்க்கு அநுக்கிரகிக்கும் முறைமை எங்ஙனமெனில்? மலபரிபாகம் வந்தவிடத்து இருவினை யொப்புப் பிறக்கும். அப்பொழுது முன் செய்த சிவபுண்ணியம் வந்தெய்த, அப்பரமசிவம் மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல, ஞானசாரிய மூர்த்தமாய் மான் மழு காளகண்டம் திரிநேத்திரம் ஒழித்து மானிடச்சட்டை சாத்தி, இவனது ஊரும் பேரும் உருவும் ஒழிக்கவேண்டி, ஊரும் பேரும் உருவுங்கொண் டெழுந்தருளி, மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்னும் சத்திநிபாதத் தன்மையுணர்ந்து, சமய தீக்ஷை பண்ணிச் சரியை யநுஷ்டிப்பித்து, விசேஷ தீக்ஷைபண்ணிக் கிரியா யோகங்களை அநுஷ்டிப்பித்து, நிருவாண தீக்ஷைபண்ணி ஞான மநுக்கிரகித்து, மல மாயாதி கன்மங்களை நீக்கி மோட்சத்தைக் கொடுக்கும்.

ஆன்மாக்களின் பரியாயப் பெயர்களாவன,—பசு, சீவன், புருடன், புமான், தேகி, கிஞ்சிக்ஞன், சுதந்தரகீனன், பரதந்திரன், அகர்த்தா, அணு, அறியாதவன், உள்ளம், சைதன்யன், பிரகிருதி, புத்தி, பிராணன், சதசத்து, புற்கலன் முதலியன.

மூவகை ஆன்மபேதமுஞ் சரீரத்தை யடைந்து காரியப் படும் முறைமையும், அநுக்கிரகம் பெறும் முறைமையுங் கண்டுகொள்க.

## 3. பாச இலக்கணம்

பாசம் :—ஆன்மாக்களுக்கு அநாதியிலேயே பந்தமா யிருக்கிற ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை, திரோதாயி என ஐவகைப்படும்.

இவற்றுள் ஆணவம்,—ஒன்ருய், பரிபாகத்திலே நீங் குஞ் சத்தியை யுடையதாய், மூலமலமாய், இருளும் ஒளி யென்னுமாறு *இருண்டதாய், வியாபகமாய், சிவத்தையும் ஆன்மாவையும் பாசத்தையுந் தெரியவொட்டாமல், செம் பிற் களிம்பு போலவும் அரிசியிற் றவிடு போலவும் தண்ணீ ரில் உப்புப் போலவும் ஆன்மாவை இரண்டறக் கலந்து, இச்சா ஞானக் கிரியைகள் முழுவதையும் மறையா நிற்கும்.

கன்மம்,—வியாபகமாய், அவ்வவ் வணுக்கள்தோறும் வெவ்வேருய், மனோவாக்குக் காயங்களின லறிந்தும் அறியாமலு மியற்றுவதனல் வந்தேறுகிற புண்ணிய பாவங் களாய், சுக துக்கங்களைப் பண்ணுவதாய், இதாகிதங் களினல் ஆவதாய், அநுபவித்தாலன்றித் தீராததாய், ஒன்ரு லொன் றழிக்கப்படாததாய், விதிப்படி பரிகாரஞ்செய்யின் நீங்குவதாய், நெல்லுக்குள் முளைபோல ஆன்மாவிற் பற்றி யிருப்பதாய், சங்கிலிபோலத் தொடர்ச்சியாய், அழிந்தும் ஆகியும் வருவதாய், பிரவாகத்து அலைபோல்வதாய், சிருட்டிக் காலத்தே காரியப் படுவதா யிருக்கும்.

இந்தக் கன்மம்,—சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூவகையாம்.

இவற்றுள் சஞ்சிதம்,—அநாதிதொட்டுச் சனனங்கள் தோறும் ஆர்ச்சித்த வினை புசித்து விஞ்சியதாகி, †ஆறு அத்து வாக்களிலுங் கட்டுப்பட்டிருக்கிற புண்ணிய பாவங்களா யிருக்கும்.

---

*ஆன்ம சிற்சத்தியை மறைத்தலால், இருளும் பிரகாசமென்று சொல்லும்படி, மிகக் கறுத்துள்ளது ஆணவமலம் எனப் பொருள்.

†அத்துவா ஆருவன,—மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத் துவா, புவனத்துவா தத்துவாத்துவா, கலாத்துவா என்பனவாம்.

பிராரத்தம்,—இந்தச் சஞ்சிதத்திற் சிறிது புசிக்கப் பாகப்பட்ட வினை, ஒரு சரீரத்தை யெடுப்பித்துச் சாதி யாயுப் போகங்களைக் கொடுக்கும்.

ஆகாமியம்,—பிராரத்தம் புசிக்குமிடத்து வந்தேறுகிற புண்ணிய பாவங்களா யிருக்கும்.

இனித் திரோதாயி,—நான்கு மலங்களின் காரியங்களை யேவி ஆன்மாக்களுக்குப் பிரபஞ்சமாகிய பொய்யை மெய் யென்று ருசிப்பித்து நிற்கும். அதனால் அதைப் பாசமென் றுஞ் சொல்லுவர்.

சுத்தமாயை,—விஞ்ஞானகலருக்குத் தநு கரண புவன போகமும், பிரளயாகலருக்கும் சகலருக்கும் செலுத்துந் தத்துவமா யிருக்கும்.

அசுத்தமாயை,—பிரளயாகலருக்கும் சகலருக்கும் தநு கரண புவன போகங்களாயிருக்கும்.

இவ்விருவகை மாயையிலும் தத்துவங்கள் தோன்றும் முறைமை எங்ஙனமெனின்? பரமசிவனுடைய பராசத்தி யருளினாலே *குடிலையிலே நாதமும், நாதத்திலே விந்துவும், விந்துவிலே சாதாக்கியமும், சாதாக்கியத்திலே ஈஸ்வரமும், ஈஸ்வரத்திலே சுத்தவித்தையுந் தோன்றும். இவை ஐந்த னுள் முன்சொன்ன விந்துவிலே நாலு வாக்கும், ஐம் பத்தோரட்சரமும், எண்பத்தொரு பதமும், பஞ்ச கலை களும், சத்தகோடி மஹா மந்திரங்களும் தோன்றும்.

அசுத்த மாயையிலே நின்று அநந்ததேவ நாயனார் அருளினாலே காலமும் நியதியும் கலையுந் தோன்றும். கலையிலே வித்தை தோன்றும். வித்தையிலே அராகந்தோன் றும். ஆன்மா, இவ்வைந்துங் கூடிப் பஞ்சகஞ்சுகனான புருடனாம். முன்சொன்ன கலையிலே உருத்திரதேவ நாயனார் அருளினாலே குணரூபமான மூலப் பிரகிருதி தோன்றும். மூலப்பிரகிருதியில் முக்குணங்களுந் தோன்றும். முக் குணங்களுந் தோன்றாமல் நின்ற இடம் அவ்வியக்தம். அந்த அவ்வியக்தத்தில் சித்தமும், சித்தத்திற் புத்தியுந் தோன்றும். புத்தியிலே அகங்காரந்தோன்றும். அவ்வகங்காரம் தைசத அகங்காரம், வைகாரிக அகங்காரம், பௌதாதிக அகங்கார மென மூவகைப்படும். இவற்றுள் தைசத அகங்காரத்திலே

*மகாமாயை.

சாத்துவிக குணத்தைப் பொருந்திய மனமும் ஞானேந்திரியம் ஐந்துந் தோன்றும். வைகாரிகஅகங்காரத்திலே இராசத குணத்தைப் பொருந்திய கன்மேந்திரியம் ஐந்துந் தோன்றும். பௌதாதிக அகங்காரத்திலே தாமதகுணத்தைப் பொருந்திய தன்மாத்திரைகள் ஐந்துந் தோன்றும். சத்தத்திலே ஆகாசந் தோன்றும். பரிசத்திலே வாயு தோன்றும். ரூபத்திலே தேயு தோன்றும். ரசத்திலே அப்புத் தோன்றும். கந்தத்திலே பிருதிவி தோன்றும்.

இங்ஙனந் தோன்றிய கருவி, அகக் கருவி புறக்கருவி என இருவகைப்படும்.

அவற்றுள் அகக்கருவி—ஆன்ம தத்துவம்,—பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் எனப் பூதம்-ரு. சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என ஞானேந்திரியம்-ரு. இதன் விடயமான சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் எனத் தன்மாத்திரை-ரு. வாக்கு பாதம் பாணி பாயு உபஸ்தம் எனக் கன்மேந்திரியம்-ரு. மனம் புத்தி சித்தம் அகங்காரம் என அந்தக்கரணம்-ச. ஆக-உச.

வித்தியாதத்துவம்,—காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயை என-எ.

சிவதத்துவம்,—சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என-ரு.

ஆக அகக்கருவி - ஙசு ஆம்.

புறக்கருவி,—பிருதிவியின் கூறு-தோல் எலும்பு நரம்பு தசை மயிர் என - ரு, அப்புவின் கூறு - நீர் உதிரம் மச்சை மூளை சுக்கிலம் என - ரு, தேயுவின்கூறு - ஆகாரம் நித்திரை பயம் மைதுனம் சோம்பல் என - ரு, வாயுவின் கூறு - ஓடல் நடத்தல் நிற்றல் இருத்தல் கிடத்தல் என - ரு, ஆகாசத்தின் கூறு-குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் என-ரு, ஆகப் பூதகாரியம்-உரு; பிருதிவியின் வழித்தான இடை கலை பிங்கலை சுழுமுனை காந்தாரி அத்தி சிங்குவை அலம்புடை புருடன் குகு சங்கினி என நாடிகள்-க0; வாயுவின் வழித்தான பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிரிகரன் தேவதத்தன் தனஞ்சயன் என வாயுக்கள் - க0; ஆகாசத்தின் வழித்தான அர்த்த எடணை புத்திர எடணை உலக எடணை என எடணை-ங; வாக்காதியின் வழித்தான வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆநந்தம்

என-ரு ; பிரகிருதியின் வழித்தான சாத்துவீகம் இராசதம் தாமதம் என குணம்-ந, விந்துவின் வழித்தான சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என வாக்கு-ச. ஆகப் புறக்கருவி கூO-ஆம்.

ஆக அகக்கருவி புறக்கருவிகளாகிய தத்துவந் தொண்ணூற்றாறும் (96) தோன்றிய முறைமையிலே ஒடுங்கும் முறைமையுங் கண்டுகொள்க.

தத்துவங்களின் தன்மைகளாவன,—பிருதிவிக்கு வடிவு - நாற்கோணம், நிறம் - பொன்மை, குணம் - கடினம், சுபாவம் - கிடத்தல், தொழில் - பொறுத்தல், குறி-வச்சிரம், தேவதை - பிரமன், அட்சரம் - லகாரம், சூக்கும பஞ்சாட்சரம் - அகாரம், கலை-நிவிர்த்தி.

அப்புவுக்கு வடிவு - இருகோணம், நிறம் - வெள்ளை, குணம்-நெகிழ்ச்சி, சுபாவம்-பார்த்தல், தொழில்-கட்டுண்டல், குறி-கோகநகம், தேவதை-விஷ்ணு, அட்சரம்-வகாரம், சூக்கும பஞ்சாட்சரம்-உகாரம், கலை-பிரதிஷ்டை.

தேயுவுக்கு வடிவு - முக்கோணம், நிறம் - செம்மை, குணம்-சுட்டொன்றுவித்தல், சுபாவம்-வவ்வுதல், தொழில்-உலர்த்தல், குறி - சுவத்திகம், தேவதை - உருத்திரன், அக்கரம்-மகாரம், சூக்குமபஞ்சாட்சரம்-மகாரம், கலை-வித்தை.

வாயுவுக்கு வடிவு - அறுகோணம், நிறம் - கறுப்பு, குணம்-சலித்துத் திரட்டல், சுபாவம்-நிறைத்தல், தொழில்-விம்முதல், குறி - அறுபுள்ளி, தேவதை - மகேச்சுரன், அக்கரம் - யகாரம், சூக்கும பஞ்சாட்சரம் - விந்து, கலை - சாந்தி.

ஆகாசத்துக்கு வடிவு - வட்டம், நிறம் - புகை, குணம் - இடங்கொடுத்தல், சுபாவம்-நிற்றல், தொழில்-போக்குதல், குறி-அமுதவிந்து, தேவதை-சதாசிவம், அக்கரம்-அகாரம், சூக்கும பஞ்சாட்சரம்-நாதம், கலை-சாந்தியாதீதம்.

ஞானேந்திரியம் ஐந்தின் தொழிலாவன,—சுரோத்திரம் ஆகாசமிடமாக நின்று செவியைப் பொருந்திச் சத்தத்தை யறியும் ; துவக்கு வாயுவினிடமாக நின்று சரீரத்தைப் பொருந்திப் பரிசத்தை யறியும் ; சட்சு அக்கினியினிடமாக நின்று கண்ணைப் பொருந்தி உருவத்தை யறியும் ; சிங்ுவை அப்புவினிடமாக நின்று நாவைப் பொருந்தி இரதத்தை

யறியும்; ஆக்கிராணம் பிருதிவியினிடமாக நின்று மூக்கைப் பொருந்திக் கந்தத்தையறியும்.

கன்மேந்திரியம் ஐந்தின் தொழிலாவன,—வாக்கு ஆகாசமிடமாக நின்று வசனிக்கும்; பாதம் வாயுவினிடமாக நின்று கமனிக்கும்; பாணி அக்கினியினிடமாக நின்று இடுதலும் ஏற்றலுஞ் செய்யும்; பாயு அப்புவினிடமாக நின்று மலவிசர்ச்சனஞ் செய்யும்; உபஸ்தம் பிருதிவியினிடமாக நின்று சுக்கிலத்தைக் கழிக்கும்.

தன்மாத்திரைகள் ஐந்தின் தொழிலாவன,—சுரோத்திராதிகளுக்கு விடயமாயிருக்கும்.

அந்தக்காரணங்களின் தொழிலாவன :—

மனம் பற்றும், புத்தி நிச்சயிக்கும், அகங்காரம் கொண்டெழும், சித்தஞ் சிந்திக்கும்.

வித்தியா தத்துவங்களின் தொழிலாவன,—காலம் செல்காலமான எல்லையும், நிகழ்காலமான பலமும், எதிர்காலமான புதுமையும் ஆக மூன்றுவிதமா யிருக்கும்.

நியதி அரசனாணைபோலக் கன்ம பலத்தை உள்ளளவும் நிறுத்தும். கலை ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவுக்குக் கிரியையை யெழுப்பும். வித்தை ஆன்மாவுக்கு ஞானத்தை எழுப்பும். அராகம் ஆன்மாவுக்கு இச்சையை யெழுப்பும். ஆகக்கலையாதி பஞ்ச கஞ்சுகத்துடனே கூடிப் புலன் நுகரும் இடமே புருடனும். மாயை பிரகிருதி குணரூபமாய் நின்று பொருந்தினதில் அழுந்தும்.

சிவதத்துவங்கள் ஐந்தின் தொழிலாவன,—சுத்தவித்தை ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும். ஈசுர தத்துவம் கிரியையேறி ஞானங் குறைந்திருக்கும். சாதாக்கிய தத்துவம் ஞானமுங் கிரியையு . மொத்திருக்கும். சத்திதத்துவம் கிரியையாயிருக்கும். சிவதத்துவம் ஞானமா யிருக்கும்.

ஆக அகக்கருவி முப்பத்தாறின் (36) தொழிலுங் கண்டு கொள்க.

பூதகாரியம் புறக்கருவியின் தொழிலாவன :—

பூதம் ஐந்தில் பிருதிவியின் கூறுகிய மயிர் வளரும், எலும்பு உரக்கும், தோல் வற்கென்னும், நரம்பு கதித்தோடும், தசை முற்றும்.

அப்புவின் கூறுகிய நீர் விழும், உதிரம் பரக்கும், சுக்கிலம் வர்த்திக்கும், மூளை மெத்தென்றிருக்கும், மச்சை நிறைக்கும்.

தேயுவின் கூறுகிய பசி தாபிக்கும், நித்திரை மயக்கும், பயம் அஞ்சுவிக்கும், மைதுனம் சங்கமஞ் செலுத்தும், சோம்பு முறிப்பிக்கும்.

வாயுவின் கூறுகிய ஓடல் விரைவிக்கும், இருத்தல் அழுத்துவிக்கும், கிடத்தல் போடுவிக்கும், நடத்தல் எழுப்புவிக்கும், நிற்றல் நிற்பிக்கும்.

ஆகாயத்தின் கூறுகிய, காமம் மோகிப்பிக்கும், மதம் அகங்கரிப்பிக்கும், குரோதம் கோபிக்கும், லோபம் பிசினிப்பிக்கும், மாச்சரியம் இகழ்விக்கும், ஆகப் பூதகாரியம் உரு.

### பிருதிவியின் வழித்தான நாடிகளின் தொழில்

பிருதிவியின் வழித்தான நாடிகள் பத்தில் இடைகலை இடது மூக்கிலே நிற்கும்; பிங்கலை வலது மூக்கிலே நிற்கும்; சுழுமுனை நேரே நிற்கும்; காந்தாரி கண்ணிலே நிற்கும்: அத்தி உடலெங்கும் நிற்கும்; சிங்ஙுவை தாதுவிலே நிற்கும்; அலம்புடை செவியிலே நிற்கும்; புருடன் பாதத்திலே நிற்கும்; சங்கினி களத்திலே நிற்கும்; குகு மார்பிலே நிற்கும்.

வாயுக்கள் பத்தில் பிராணன் மூலாதாரத்தில் தோன்றி இடை பிங்கலையாலேறிக் கபாலத்தளவுஞ் சென்று, நாசியிலே பன்னிரண் டங்குலம் புறப்பட்டு, நாலங்குலம் வெளியே சென்று எட்டங்குலம் உள்ளே அடங்கும். இங்ஙனம் ஒரு நாளைக்கு இருபத் தோராயிரத்தறுநூறு (21600) சுவாசம் நடக்கும். இதிலே எழாயிரத்திருநூறு (7200) வெளியே செல்லும். பதினாலாயிரத்து நானூறு (14400) உள்ளே அடங்கும். உதானன் விக்கல் இருமல் இவற்றைப் பண்ணும். அபானன் மலவிசர்க்கம் பண்ணும். வியானன் உண்ட அன்னசாரத்தை எழுபத்திராயிரம் (72000) நாடிகளிலுங் கலப்பிக்கும். சமானன் எல்லாவற்றையுஞ் சமானம் பண்ணும். நாகன் தும்மல் இருமலை யுண்டாக்கும். கூர்மன் கண்ணேற்றல் செய்யும். கிரிகரன் சோம்பு கொட்டாவிகளை யுண்டாக்கும். தேவதத்தன் இமைத்தல் நகைத்தல்களைச் செய்யும். தனஞ்சயன் உடம்பை வீங்கவும் விரியவுஞ் செய்து, உயிர் நீங்கிய காலத்தில் கபாலத்தைப் பிளந்து செல்லும்.

வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆநந்தம் ஐந்தும் வாக்காதிகளுக்கு விடயமா யிருக்கும்.

குணம் மூன்றில் சாத்துவிகம் அருள், ஐம்பொறி அடக்கல், ஞானம், தவம், பொறை, மேன்மை, மோனம், வாய்மை ஆகிய எண் குணமுடையது; இராசதம் ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தவம், தானம், கல்வி, கேள்வி ஆகிய எண் குணம் உடையது; தாமதம் ஒழுக்கமின்மை, காமம், கோபம், கொலை, சோம்பு, நீதிவழு, நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சகம் முதலிய தீக்குணமுடையது.

ஏடணை மூன்றில் அர்த்த ஏடணை திரவியம் முதலியவற்றால் வரும் பிணக்கு; புத்திர ஏடணை புத்திரர் முதலாகிய சுற்றத்தாரால் வரும் பிணக்கு; உலக ஏடணை உலகம் முதலாகிய சங்கற்பத்தால் வரும் பிணக்கு.

வாக்கு நான்கில் சூக்குமை சோதியாய் நேர்மையாய் ஒன்று சொல்ல வந்தவிடத்தில் துரியத்தில் நாதமாய்த் தோன்றுவது; பைசந்தி சுழுத்தித்தானத்தைப் பொருந்திய சூக்குமையில் தோன்றிய நாதம், உதான வாயுவினாலே சிதறப்பட்டு மயில் முட்டையில் பஞ்சவன்னமும் அடங்கியிருப்பதுபோல, இனிச் சொல்லும் வசனத்துக்கு அக்கர சொரூபம் பிறக்கக் கருக்கொண்டிருப்பது; மத்திமை அந்தச் சிதறப்பட்ட வாயுவானது, சொப்பனத் தானத்திலே பிராணவாயு வுடனே சேர்ந்து அக்கரத்தினது சொரூபங்களைப் புத்தியிலே ஒழுங்குபட நிறுத்திச் செவியிற் கேளாமல், உள்ளே கேட்கத்தக்க ஒலியாய்க் கண்டத்திலே முழங்கா நிற்பது; வைகரி நாக்கு, அண்ணம், உதடு, பல், மூக்கு என்னும் ஐந்திடத்திலேயும் புறப்பட்டுச் செவிக்குக் கேட்க வசனிக்கப்படுவது. இந்த வாக்கு நான்கும் பஞ்சகலைகளாற் காரியப்படும்.

இங்ஙனம் புறக்கருவிகள் அறுபதின் (60) தொழிலையும், பஞ்ச பாசங்களையும், அவற்றினுண்டாகிய தோற்ற வொடுக்கம் முதலியவற்றையுங் கண்டுகொள்க.

அவஸ்தைகளாவன,—கேவலம், சகலம், சுத்தம், என மூன்று வகைப்படும். இவற்றுள் கேவலம்—ஆன்மா தத்துவங்களொன்றையும் கூடாதிருப்பது; சகலம்—தத்து

வங்களுடனே கூடிக் காரியப்படுவது; சுத்தம்—கேவல சகலம் இரண்டுந் தாக்காமல் பரமசுகமாகிய ஆநந்தத்தைப் பெற்றிருப்பது. ஆகக் காரணாவஸ்தை மூன்றில் கேவலாவஸ்தையின் காரியம் - ரு, சகலாவஸ்தையின் காரியம் - ரு, சுத்தாவஸ்தையின் காரியம் - ரு, ஆகக் காரியாவஸ்தை - கரு.

கேவலத்தின் காரியமாகிய கீழாலவஸ்தை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆக - ரு. இவற்றுள் சாக்கிரம்—தத்துவம் முப்பத்தாறில் சிவ தத்துவம் ரு-ம், புருடன் நீங்கலாகக் கலாதிகள் சு-ம், பூதம் ரு-ம், ஆகப் பதினாறு கருவியும் நீங்கி நின்ற கருவிகள் இருபதும், புறக்கருவி யறுபதில் வாயுக்கள் பத்தும், வசனாதிகளைந்தும், ஆகிய முப்பத்தைந்துடனே (35) லலாட ஸ்தானத்தில் நின்று கண்டு கேட்டு உண்டு உயிர்ப்பது நீங்கி, மயக்கத்தைப் பொருந்தி, அறிகருவிகளையுஞ் செலுத்துங்கருவிகளையுங் கைவிட்டு நிற்கின்ற அவதரம்.

சொப்பனம்—ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகிய பத்தும் லலாட ஸ்தானத்திலே நிற்க, மற்ற இருபத்தைந்து (25) கருவிகளுடனே கண்ட ஸ்தானத்திலே நின்று சூக்கும தேகத்தாற் பயன்கொண்டு அசிவனமாக நின்ற அவதரம்.

சுழுத்தி—பிராண வாயு நீங்கலாக வாயுக்கள் ஒன்பதும், சித்தம் நீங்கலாக அந்தக்கரணம் ங-ம், சத்தாதி ரு-ம், வசனாதி ரு-ம், ஆக இருபத்திரண்டும், கண்ட ஸ்தானத்திலே நிற்க, சித்தமும் பிராணவாயுவும் புருடனும் ஆகிய மூன்று (3) கருவிகளுடனே ஒன்றுந் தெரியாது ஆன்மா இருதயத்தில் நின்ற அவதரம்.

துரியம்—சித்தமொன்றும் இருதயத்தில் நிற்கப் பிராண வாயுவும் புருடனும் நாபித்தானத்திலே இரண்டாய் (2) நின்ற அவதரம்.

துரியாதீதம்—பிராணவாயு ஒன்றும் நாபியில் நிற்கப் புருடனொன்றும் (1) மூலாதாரத்திலே அதீதமாய்க் கருவிகள் ஒன்றுமின்றிக் கேவலஸ்தனாய் நிற்பது. ஆகக் கீழாலவஸ்தை - ரு.

சகலாவஸ்தையின் காரியமாகிய மத்தியாலவஸ்தை—சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் றுரியம், சாக்கிரத்திற்

றுரியாதீதம் ஆக - ரு. இவற்றுள் சாக்கிரத்தில் அதீதம் ஒருவன் ஒரு பதார்த்தத்தை ஓரிடத்திலே வைத்து அறியாமல் நிகைத்து நின்ற அவதரம்; சிறிது பிராணவாயு இயங்கியது சாக்கிரத்தில் துரியம்; அந்தப் பதார்த்தத்தை எங்கே வைத்தோம் என்று விசாரிக்க வந்தவிடம் சாக்கிரத்திற் சுழுத்தி: அந்தப் பதார்த்தம் வைத்தவிடம் நிழலெழத் தோன்றுவது சாக்கிரத்திற் சொப்பனம்; அந்தப் பதார்த்தம் புலப்பட அறிய வந்தவிடம் சாக்கிரத்திற் சாக்கிரம்; ஆக மத்தியாலவஸ்தை-ரு.

சுத்தாவஸ்தையின் காரியமாகிய நின்மலாவஸ்தை—அமல சாக்கிரம், அமல சொப்பனம், அமல சுழுத்தி, அமல துரியம், அமல துரியாதீதம், ஆக - ரு. இவற்றுள், அமல சாக்கிரம் ஆசாரியராலே ஞானதீட்சை பெற்றுத் திரிபதார்த்த வுண்மையை விசாரித்தறிந்து கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பொருளுடனே நிட்டைகூடும் பகுதிக்குக் கருவியினின்று நீங்கி விசாரித்து நிற்பது; அமலசொப்பனம் கருவிகளினின்று நீங்கியும் நீங்காதும் நிற்காது நடுவே சற்றுப் பதைப்புண்டாய் நிற்பது; அமல சுழுத்தி தத்துவங்களினின்று நீங்கி மேலான கேவலஸ்தனாய் நிற்பது. அமல துரியம் கேவலம் நீங்கி அருளினாலே தன்னையும் அருளையுங் கண்டு தன் வசத்தழிந்து அருள் வழித்தாய் நிற்பது; அமல துரியாதீதம் பணியற நின்று சிவத்தைத் தரிசித்து ஆநந்தத்தில் அழுந்தி நிற்பது. ஆகக் காரியாவஸ்தை - கரு, காரணாவஸ்தை ௩ - ஆக அவஸ்தை - கஅ - ல், பெத்தர்க்கு - கஉ-ம், சத்திநிபாத முத்தர்க்கு ௬-ம், எனக்கொள்க.

இனி, உணர்த்தும் முறைமை ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்மலாபம் என மூன்று விதமாயிருக்கும்.

இவற்றுள் ஆன்ம தரிசனம்,—ஆன்மா படிகம் போல்வதென்றும், தானு யிருப்பதென்றும், எப்பொழுதும் வியாபியென்றும், இதனறிவு சிவனறிவிலே கலந்து நின்று கண்ணும் ஆதித்தனும் போலக் காணுமென்றும், ஒரு பதார்த்தத்தை அறியவேண்டின் பொறியில் ஒன்றும் பூதத்தில் ஒன்றும் அந்தக்கரணம் நான்கும் கலாதிகள் ஏழும் சிவதத்துவம் ஐந்தும் ஆகக் கருவிகள் கஅ-ம் கூடாமல் அறியமாட்டாது என்றும்; வித்தியாதத்துவங்களில் மாயையைச் சிவதத்துவஞ் செலுத்த, கலை காலம் நியதியைச் சத்திதத்துவஞ் செலுத்த, அராக தத்துவத்தை ஈசுர தத்துவஞ்

செலுத்த, புருடனைச் சாதாக்கிய தத்துவஞ் செலுத்த, வித்தையைச் சுத்தவித்தை செலுத்த, ஈசுர தத்துவத்தை இச்சாசத்தி செலுத்த, சாதாக்கிய தத்துவத்தையுஞ் சத்தி தத்துவத்தையுங் கிரியாசத்தி செலுத்த, சுத்தவித்தையை யுஞ் சிவதத்துவத்தையும் ஞானசத்தி செலுத்த இவ்வாறு காரியப்படுவதன்றித் தத்துவங்கள் தாமே வந்து ஆன்மா வைப் பொருந்தமாட்டா வென்றும் ; அவ்வான்மா தானே தத்துவங்களைப் பொருந்தமாட்டா தென்றும், திருவருள் கூட்டி முடிக்கக் காரியப்படு மென்றும், பெத்தத்திலும் முத்தியிலும் ஒருகாலும் விட்டு நீங்காமல் நிற்கும் அரு ளுக்கே சுதந்தரமன்றித் தனக்கொரு சுதந்தரமும் இல்லை யென்றும் அறிந்து நிற்பதாம்.

ஆன்மசுத்தி,—தனக்கு அநாதியே துணையாய் இற்றை வரையுந் தோன்றாதிருந்து இப்பொழுது ஆன்மாவையுந் தன்னையுங்காட்டி நிற்கிற திருவருளே தாரகமாகத் தனக்குப் பந்தமாய் இருந்த மலம் திருவடியின் நீங்கத் தன்னுடைய சுதந்தரஹானியை அறிவதினாலும், கன்மசஞ்சிதம் தீக்ஷை யினாலும், பிராரத்தம் சரீராந்தமளவும், ஆகாமியம் சுட்டற நிற்கையினாலும், மாயை யிரண்டும் தத்துவங்கள் எல்லாம் நீங்கி நிற்பதினாலும், வினையேறும விருப்பதினாலும், திரோ தாயி பிரபஞ்சத்தை ருசிப்பியாமல் இருந்ததினாலும், பஞ்ச பாசம் நீங்கக் கண்டு பணியற்றுத் திருவருள் வசத்ததாய் நிற்பதாம்.

ஆன்மலாபம்,—அங்ஙனம் இடைவிடாம லிருப்பதனாற் பரமாநந்த சுகமுண்டாக, அதைப் பெற்று ஆநந்தமேலீட் டில் அழுந்தி நிற்பதாகிய நேயத்தழுந்தலாம். அந்நிட்டை கூடுதற்கரிதாயின் அவ்வருளிலே யழுந்திநிற்க ! அஃதுங் கூடுதற்கு அரிதாயின், பூதமுதல் நாதமளவாகப் பொய் யென்று கண்டு நீங்கித் தன்னைக் கண்டு, தானும் அருளும் நிற்கும் முறைமையையும் அறிந்து, அருளே நாவாக முத்தி பஞ்சாட்சரத்தை, செபியாமற் செபிக்க ! அஃதும் கூடுதற் கரிதாயின் ஞானநூலோதியும் சிந்தித்தும் அந்தரியாகம் (அகவழிபாடு) பண்ணுக ! இவ்வாறு செய்யவே உண்மை வந்து கைகூடும். இங்ஙனம் நேயத்தழுந்தல் முதலாகிய எந்நிலையில் நிற்கினும், ஆசாரியரையும் திருக்கோயிலையும் திருவேடத்தையும் நாளும் வழிபடுக!

# மயிலை கிழாரின் மணிவிழா நிகழ்ச்சி

## சமாஜத்தின் சிறப்புக் கூட்டம்

1956 மார்ச்சு 25-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குச் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில், முன்னரே "சித்தாந்தம்" இதழில் அறிவிக்கப் பட்டிருந்தவாறு, திரு. மயிலை பாலசுப்பிரமணிய முதலியார் பி.எ., பி.எல். அவர்களின் மணிவிழாப் பாராட்டுக் கூட்டம், தர்மசம்ரட்சாமணி மயிலை திரு. K. பாலசுப்பிரமணிய ஐயர் பி. எ., பி. எல்., எம்.எல்.சி. அவர்கள் தலைமையில், நமது சமாஜச் சார்பில் மிகவும் சிறப்புற நிகழ்ந்தது. சமாஜ அன்பர் களும், சமய சபைகளின் பிரதிநிதிகளும், திருக்கோயில் தருமகர்த்தர்களும், பிறரும் வந்திருந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

மயிலை திரு. சிங்கார முதலியார் அவர்கள் 4 மணி முதல் 5½ மணி வரை திருமுறை இசை வழங்கினார்கள். கூட்டத் தலைவர் காஞ்சிபுரம் சென்று வர நேர்ந்து திரும்பச் சிறிது காலந் தாழ்த்தமையின், அவர்கள் வரும் வரையில் திரு. நல். முருகேச முதலியார் பி. எ. அவர்கள் தலைமை ஏற்று, அரியதொரு முன்னுரையை ஆர்வம் மிக, நிகழ்த் தினார்கள். அதற்குள் "தர்மசம்ரட்சாமணி" அவர்களும் வந்து சேர்ந்து, திரு. ம. பா. அவர்களின் பலதிறப் பண்பு களையும் பாராட்டி மகிழ்ந்தனர். அன்றியும், காஞ்சியில் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், ம. பா. அவர்களின் சாந்த குணம் பற்றித் தம்மிடம் குறிப்பிட்டுப் புகழ்ந்ததனையும், அவையினருக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பின்னர், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி.எ.,எல்.டி., வ. ஆ. தேவசேனபதி எம்.எ.,பிஎச்.டி., பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மாள், பேராசிரியர் சங்கர நாராயணன் எம்.எ., பு. ஆறுமுக முதலியார் பி. எ., பி.எல்., திருவாலியூர் அரங்காச்சாரி, வித்துவான் க. வெள்ளை வாரணனார் முதலானோர் மணிவிழாத் தலைவரின் மாண்புகள் குறித்துப் பாராட்டிப் புகழ்ந்து பேசினர்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் (தருமபுரம்), ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் (திருப்பனந்தாள்), ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக சுவாமிகள் (மதுரை), சிவத்திரு. குன்றக்குடி அடிகளார், கோவைகிழார் இராமச்சந்திரஞ் செட்டியார், இலங்கை சு. நடேசப் பிள்ளை, யாழ்ப்பாணம் முத்துத்தம்பி, அருளம்பலம், ஸ்ரீ ஸ்கந்தராஜா, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் கே. சுவாமிநாதன், மயிலை பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார், தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, சைதை ஆடலரசு, சிதம்பரம் ரத்தினசாமி செட்டியார், கூனூர் சுப்பிரமணியனார், புலவர். மயிலை சிவமுத்து, அடையாறு உ. வே. சா. நூல்நிலையம், பண்டிதர் வடிவேல் முதலியார், கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், புரிசை சு. முருகேச முதலியார், சைவத்தமிழ்மணி அ. ச. ஞான சம்பந்தனார், பேராசிரியர் டாக்டர். துரையரங்கனார், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், வல்லை பாலசுப்பிர மணியம், வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், அண்ணாமலைநகர் வித்வான் மு. அருணாசலம் பிள்ளை, காஞ்சிபுரம் சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலியார், வித்துவான் அருணைவடிவேல் முதலியார், வித்துவான் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, சித்தாந்த ரத்னாகரம் முத்து சு. மாணிக்கவாசக முதலியார், பாலகவி வயிநாகரம் இராமநாதன் செட்டியார் முதலிய பலர் வாழ்த்துத் தந்திகளும், கடிதங்களும் அனுப்பி இருந்தனர். அவைகளைத் திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் பி.ஏ., பி.டி. அவர்கள் அவையினருக்குப் படித்துக் காட்டினர்.

நாகர்கோயில் நன்னெறி மன்றம், சென்னை மாணவர் மன்றம், சிந்தாதிரிப்பேட்டைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஆண்கள் உயர்நிலைப் பள்ளி முதலியனவற்றின் சார்பில் வாழ்த்துரைகள் படித்துக் கொடுக்கப்பெற்றன. இராயப்பேட்டை பால சுப்பிரமணிய பக்த ஜன சபையின் வாழ்த்திதழை, அதன் செயலாளர் திரு. சி. நடராஜ முதலியார் பி.ஏ., பி.எல். அவர்கள் படித்துக் கொடுத்தார்கள். சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம்.ஏ. அவர்களும், வாசன் ஸ்டூடியோ எம். சம்பந்த நாயகர் அவர்களும் மணி விழாத்

தலைவருக்கு மாலைகள் சூட்டினர். பல்லாவரம் மறைமலை அடிகள் மன்றமும் மாலை சூட்டியது.

இறுதியில், மணிவிழாத் தலைவர் திரு. ம. பா. அவர்கள், கடவுளுணர்ச்சியும் வழிபாடும் யாவர்க்கும் இன்றியமையாதன என வற்புறுத்திப் பேசிப் பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். அதன் பின் சமாஜச் செயலாளர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள், மணிவிழாத் தலைவரின் நினைவாக இதுகாறும் வெளிவராத சித்தாந்த சாத்திர விளக்க உரை நூல்கள் சில, இனிச் "சித்தாந்தம்" இதழில் வெளிவரும் எனத் தெரிவித்து, அனைவருக்கும் நன்றியுரை நவின்றார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது. (உ. ப-ர்)

---

## திருவாசகப் பதிப்பு விண்ணப்பம்

பழைய சுத்தப் பதிப்புகள், ஓலைச்சுவடிகள் கொண்டு மூலபாட வேறுபாடுகள் முதலியன குறிக்க ஏற்பாடு செய்யப் பெற்றிருக்கிறது. பழைய மூலப்பதிப்புகள், உரைப்பதிப்புகள், ஓலைச்சுவடிகள் வைத்திருப்பவர்கள் கடனாகத் தந்து இத்திருப்பணியைச் செம்மையாகத் திருத்த முறப் பதிப்பிக்கத் துணைசெய்ய விண்ணப்பிக்கிறேன். உதவ முன் வருவோர் சுவடியை உடன் அனுப்பி வைக்கலாம். பழைய பதிப்புப் புத்தகமாயின் விபரமாக எந்த ஆண்டு, யார் பதிப்பு முதலியன கடித மூலம் எழுதினால், தேவையானால் எழுதிப் பெற்றுக்கொள்கிறோம். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பதிப்புத் தேவை. வைத்திருப்போர் உடன் தந்து உதவி செய்க.—செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம், 10, மான்டேத் ரோட், சென்னை-8.

---

## முக்கிய அறிக்கை

விற்பனைக்கு உரிய சமாஜப் பதிப்பு நூல்களைப் பெற விரும்புவோர் **பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1** என்ற முகவரிக்கு எழுதிப்பெறுக. புத்தகங்களை அஞ்சல் மூலம் பெறுவது அதிகச் செலவாதலால் புத்தக வியாபாரிகள் மூலம் பெற முயலுக.—தி. கி. நா.

## திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி

திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் எழுதிய உரையும், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் எழுதிய அணிந்துரையும் கொண்டது, சமாஜப் பொன்விழா வெளியீடுகளுள் ஒன்றாகப் பதிப்பிக்கப்பெற்றது. 176 பக்கங் கொண்டது. விலை ரூபா ஒன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஒன்பது.

---

## பெரியபுராணம் மூலம்

சமாஜ மூன்றாம் பதிப்பு, 708 பக்கங்கள், முழு கலிக்கோ பைண்டு, 50 பக்கங்களில் பல தலைப்புக்களில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும் பொருள் ஆராய்ச்சி அகராதி, யாப்புக் குறிப்பட்டவணை, திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் கூடிய கையடக்கமான பதிப்பு. விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0.

---

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும் பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர் பைண்டு விலை அணா பன்னிரண்டு.

**முருகன் முந்நூல்** விலை அணா 3

**பாம்பன்-குமரகுருதாச சுவாமிகள் அருளிய**

**செவியறிவுறூஉ** விலை அணா 3

**சிவஞான தீபம்** விலை அணா 8

தபாற்கூலி வேறு.

---

கிடைக்குமிடம் :—

**பாரி நிலையம், 59,** பிராட்வே, சென்னை-**1**

# சைவ சித்தாந்த மகா சமாஜம்

# பொன்விழா மலர்

மிக மிகக் கவர்ச்சியான வெளியீடு. இதில் ஐம்பத்தொரு கட்டுரைகள் உள்ளன. சமாஜத்தின் ஐம்பது ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் தெளிவாக எழுதப் பெற்றுள்ளன. ஐம்பதாண்டுகளில் நடந்த நிறைவு விழாக்களின் தலைவர்கள்; நடைபெற்ற இடங்கள்; மங்கையர் மாநாடு, இளைஞர் மாநாட்டு விவரங்கள்; சமாஜத் தொண்டர்கள் தொண்ணூற்றொருவர் பற்றிய குறிப்புக்கள்; உயர்திருவாளர்கள்: ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், ஜே. எம். நல்லசாமிபிள்ளை, ஸர். பொன்னம்பலம் இராமநாதன், பொன்விழாத் தலைவர் கனம் சு. நடேசபிள்ளை, திரு.வி.க. முதலிய முப்பதின்மர் உருவப்படங்கள்; வேறு பற்பல சிறப்புக்கள் இதில் மிளிர்கின்றன. கட்டுரையாளர்களுள் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, தணிகைமணி ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலியார், சித்தாந்த ரத்னாகரம் முத்து சு. மாணிக்கவாசக முதலியார், திரு. அ. மு. பரமசிவானந்தம் முதலியோர் உள்ளனர். இருநூற்று நாற்பது பக்கங் கொண்ட அழகிய பதிப்பு.

**விலை ரூபா ஒன்று.** ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பன்னிரண்டு. உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்க. வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது.

கிடைக்கும் இடம்:

**பாரி நிலையம்,**

59, பிராட்வே, சென்னை–1.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 10, Monteeth Road, Egmore, Madras-8